# தொழிலாளி

இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் வார இதழ்

மலர் 9 ● இதழ் 3 ● 19 ஜனவரி 1971 ● பக்கங்கள் 8 ● விலை சதம் 15


## மாசேதுங் சிந்தனை

''கல்லொன்றைத் தூக்கி தன் காலில் போடுவது'' என்பது குறிப்பிட்ட சில முட்டாள்களின் செயல்களை வர்ணிப்பதற்குச் சீனமக்கள் உபயோகிக்கும் ஒரு முதுமொழி. சகல நாட்டுப் பிற்போக்குவாதிகளும் இத்தகைய முட்டாள்களே. புரட்சிகர மக்களுக்கு எதிரான அவர்களின் அடக்குமுறைகள் அனைத்தும், இறுதியாக ஆராய்ந்து பார்த்தால், மக்களின் புரட்சியை மேலும் விசாலமான, மேலும் தீவிரமான அளவில் வளர்ப்பதற்கு மாத்திரமே துணை செய்யும்.

# இனவெறி பிடித்த தென் ஆபிரிக்காவுக்கு

# பிரிட்டிஷ் ஆயுதங்கள்

இந்து மகா சமுத்திரத்தில் இலங்கைக்குத் தெற்கே அமைந்துள்ள டியகோ கார்ஷியா தீவை பல லட்சக்கணக்கான டாலர் செலவில் இராணுவத் தளமாக மாற்றுவதற்கு அமெரிக்க, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்களிடையே ஏற்பட்டுள்ள உடன்படிக்கைபற்றி நாம் சென்றவாரம் குறிப்பிட்டிருந்தோம். இந்த இராணுவத் தளம் அமைக்கப்படுவதனுல் இந்து மகா சமுத்திரத்திலுள்ள நாடுகளின் மக்களுக்கும், புரட்சிகர இயக்கங்களுக்கும் எழும் அச்சுறுத்தலையும் சுட்டிக்காட்டியிருந்தோம். குறிப்பாக, ஆசியாவிலும், ஆபிரிக்காவிலுமுள்ள சக்திமிக்க தேசிய விடுதலை இயக்கங்களை நசுக்கும் நோக்கங் கொண்ட படுபிற்போக்குத்தனமான, மிருகத்தனமான நவ காலனித்துவ நடவடிக்கை என் இச் செயலை வன்மையாகக் கண்டித்திருந்தோம். காமன் வெல்த் நாடுகள் ஏகாதிபத்திய பிசாசுகளுக்கு விடுக்கும் தாழ்மையான வேண்டுகோள்களால் பலனேதும் கிட்டப் போவதில்லை; உலகிலிருந்து ஏகாதிபத்தியங்களைத் தூக்கி எறிய ஐக்கியப்பட்ட சர்வதேசப் போராட்டமே நிரந்தரமான பலனை அளிக்கும் என எடுத்துக்காட்டியிருந்தோம்.

சிங்கப்பூர் மாநாட்டில் எழுப்பப்பட்டு, ஆபிரிக்கக் கண்டத்தின் சில தலைவர்களின் தயவு தாட்சண்யமற்ற நேரடி கண்டனத்துக்கு உள்ளாகியுள்ள மற்றுமொரு விஷயத்தைப்பற்றி இவ்வாரம் குறிப்பிட விரும்புகிறேம். கேடுகெட்ட இன ஒதுக்கல்-நிற வெறிக்கொள்கையைத் தொடர்ந்து கடைபிடித்து வருவதன் மூலம் உலக அபிப்ராயத்தை மீறவும், தட்டிக் கழிக்கவும் செய்கின்ற தென் ஆபிரிக்காவின் இனவெறி அரசாங்கத்துக்கு ஆயுதங்கள் விற்பதென பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் எடுத்துள்ள தீர்மானத்தையே நாம் சுட்டிக் காட்டுகிறேம். தென் ஆபிரிக்காவும், ரொடீஷியாவும் கடைப்பிடித்து வரும் இன ஒதுக்கல் என்ற நிறவெறி மீது நியாய எண்ணங்கொண்டவர்கள் கொண்டுள்ள வெறுப்பை இங்கு விளக்க வேண்டியதில்லை. எண்ணிக்கையில் குறைவாயுள்ள வெள்ளையர்கள் எண்ணிக்கையில் பெரும்பான்மையினரான கறுப்பு மக்களை அடக்கி, ஒடுக்கி அடிமைகளாக்கி ஆட்சி செலுத்துவது இந்த நாடுகளிலே சட்ட பூர்வமாக்கப் பட்டிருக்கின்றது. வெறுக்கத்தக்க இந்த ஆட்சிகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழும் சகல குரல்களும் பலாத்காரமாக, துப்பாக்கியின் துணைகொண்டும், தடுப்புக்காவல் முகாம்களில் செய்யப்படும் கோரத்தனமான சித்திரவதைகளினுலும் நசுக்கப்படுகின்றன. தென் ஆபிரிக்காவையும், ரொடீஷியாவையும் ஐக்கிய நாடுகள் சபை கூட ஒதுக்கி வைக்குமளவுக்கு இந்த அட்டூழியங்களை எதிர்த்து உலக அபிப்பிராயம் பலமாக இருக்கிறது.

ஆனுல், இவையெல்லாவற்றுக்கும் இடையிலும், பாராளுமன்ற ஜனநாயகத்தின் தாயகம் என்று தன்னைப் பீத்திக் கொள்ளும்; ''ஒரு நபர், ஒரு வாக்கு'' என்ற கருத்தை பிரமாதப்படுத்தும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் உலகிலுள்ள மிகக் கடைகெட்ட, மிலேச்சத்தனமான நாட்டுக்கு ஆயுதங்கள் விற்கத் தீர்மானித்துள்ளது. சிங்கப்பூர் மாநாட்டில் திருமதி பண்டாரநாயக்கா கூறியுள்ளவாறு, ஆயுத விற்பனைக்கான நோக்கம் நிச்சயமாக வெறும் வர்த்தக நோக்கமல்ல. அது, இரண்டு வித நோக்கங்களைக் கொண்டது. ஒன்று தூர கிழக்கிலுள்ள தனது சாம்ராஜ்ய நாடுகளுக்கான கடல் மார்க்கங்களைப் பலப்படுத்துவதும், பிரட்டிஷ் காலனியாதிக்கத்தினதும், நவ காலனியாதிக்கத்தினதும் நலன்களைப் பாதுகாப்பதும் ஆகும். பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஹீத் இதை வெட்ட வெளிச்சமாகவே கூறியுள்ளான். நன்னம்பிக்கை முனையைச் சுற்றியுள்ள கடல் மார்க்கங்களைப் பாதுகாக்க ஒத்துழைப்புப் பெறும் பொருட்டே தென் ஆபிரிக்காவுக்கு ஆயுதங்கள் விற்பதாக ஹீத் கூறுகின்ருன். அடுத்த நோக்கம் என்னவென்றால், தென் ஆபிரிக்க, ரொடீஷியா இனவெறி ஆட்சிகளைப் பூண்டோடு அழித்தொழிக்க திட சங்கல்பம் கொண்ட சக்திமிக்க

என்ற சுத்த அபத்தமான பிரச்சாரத்தைப் பொய்யாக்குகின்றன.

உலக ஏகாதிபத்தியம் பலஹீனப்படுத்தப்பட்டிருந்த போதிலும், ஜீவனுடனேயே இருக்கிறது. உலகெங்குமுள்ள புரட்சிகர ஒடுக்கப்பட்ட மக்களின் விடாப்பிடியான ஐக்கியப்பட்ட முயற்சிகள் மூலம் உலக ஏகாதிபத்தியம் [illegible]கத் தூக்கியெறியப்படாமலும், அதன் புதைகுழி மீது புதியதொரு நாகரிகம் கட்டியெழுப்பப்படாமலும் இருக்கும் வரை சமாதான சகஜீவனத்தின் மூலம் இவ்வுலகில் நிரந்தர சமாதானம் நிலவச் செய்வது அசாத்தியம் என மார்க்சிஸம்-லெனினிஸம் - மாசேதுங் சிந்தனையினுல் வழி நடப்போர் நீடித்து இருக்காது என்பது சாத்தியமானதொரு விஷயமாகும். இது ஒன்றும் ஏகாதிபத்தியத்துக்குக் கவலையளிக்க முடியாது. ஏனென்ருல், பல்லாண்டு காலமாக வேறு விதங்களிலும், மறைமுக மார்க்கங்களிலும் சுரண்டலை தொடர்ந்து நடத்த ஏகாதிபத்தியம் அறிந்து வைத்துள்ளது. அதனுல் இலங்கை காமன்வெல்த்திலிருந்து விலக வேண்டுமா, இல்லையா என்ற கேள்வி பிரச்சினையாக மாறியுள்ளது.

எமது நாட்டில் நடத்தப்படும் ஏகாதிபத்தியச் சுரண்டல் எவ்விதத்திலும் பழங்கால சாம்ராஜ்ய கட்டுக்கோப்பின் மூலமாகவோ அல்லது புதிய காமன் வெல்த் மூலமோ தொடர்ந்து நடத்தப்படவில்லை. ஆனுல், நவ காலனித்துவம் என்று நாம் குறிப்பிடுகின்ற வழிகளிலேயே இன்று சுரண்டல் தொடர்ந்து நடத்தப்படுகிறது. இலங்கை இந்தியா, பர்மா ஆகிய முன்னுல் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளை எடுத்துக் கொள்

# சிங்கப்பூர் பொம்மலாட்டம்

# வெறும் கண்துடைப்பு

புரட்சிகரமான ஆபிரிக்க கறுப்பு மக்களின் விடுதலை இயக்கங்களுக்கு எதிராகத் தென் ஆபிரிக்காவை ஆயுத பாணியாக்குவதாகும்.

இந்து மகா சமுத்திரத்தில் அமெரிக்க பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்கள் அமைக்கப் போகும் புதிய இராணுவத் தளங்கள், தென் ஆபிரிக்காவுக்கு ஆயுதங்கள் விற்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் தீர்மானம் ஆகிய இவ்விரண்டு பிரச்சினைகளும்; முதன் முதலில் குருஷ்சோவினுல் துவக்கி வைக்கப்பட்டு, பின்னர் உலகெங்கும் நவீன திரிபுவாதிகளால் செய்யப்படும் உலக ஏகாதிபத்தியம் ஒழிந்து விட்டது, தாக்குதல் கொஞ்சமாக நடத்துவதே இப்பொழுது தேவை, இதனை சமாதான சகஜீவனக் கொள்கையைக் கடைப்பிடிப்ப தன் மூலம் நிறைவேற்ற முடியும் பிரச்சாரப்படுத்திய உண்மையை இப் பிரச்சினைகள் தெளிவாக்குகின்றன.

இப் பிரச்சினைகள் ஒன்றிளாவது சிங்கப்பூர் மாநாடு அர்த்தபுஷ்டியுள்ள தீர்மானம் எடுக்கும் என்ற நம்பிக்கை எமக்கு சிறிதளவும் இல்லை. ''காமன் வெல்த்'' பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்தில் மட்டும் இருக்கவில்லை. மலேசியா, சிங்கப்பூர், ஜமாய்க்கா போன்ற ஏகாதிபத்தியக் கைகூலிகள் அநேகமானவற்றையும் அது தனது அணியில் கொண்டுள்ளது. அத்தகைதொரு மாநாடு உறுதியான ஏகாதிபத்திய எதிர்ப்புத் தீர்மானத்தை நிறைவேற்றும் என்று எதிர்பார்ப்பது, அது தற்கொலை செய்து கொள்ளும் என்று எதிர்பார்ப்பதாகும். தற்பொழுதுள்ள நிலையில், காமன் வெல்த் வோம். இந்தியா ஒரு குடியரசு, இலங்கை அப்படியில்லை. ஆனுல், இவை இரண்டும் காமன் வெல்த் அங்கத்தினர். காமன் வெல்த்தில் அங்கம் வகிக்காத ஒரு குடியரசு பர்மா. ஆனுல், இந்த மூன்று நாடுகளும் வேறுபட்ட அமைப்புகளின் கீழ் ஆளப்பட்ட போதிலும் நவ காலனித்துவ சுரண்டலில் சிக்கியுள்ளன.

வெசாக் உற்சவத்தின் போது, எம்மில் பெரும்பாலானேர் பொம்மலாட்டம் கண்டிருப்பார்கள். தூரத்திலிருந்து பார்க்கும் போது, பொம்மைகளே ஆடுகின்றன என்று சில முட்டாள்கள் நம்புவர். ஏனென்ருல், அவற்றை இயக்கும் கயிற்றை அவர்கள் காண்பதில்லை. உதாரணத்துக்கு இலங்கை போன்ற சகல

8-ம் பக்கம் பார்க்க

நம்மைச் சுற்றி நலம்

# அன்று "வேலை அல்லது வேதனம்" கேட்ட திரிபுவாதிகள் இன்று ஊமைகளாகிவிட்டனர்

கெனமன் திரிபுவாதிகள் 1970, மே மாதத்திற்கு முன்னர் வேலையில்லாத் திண்டாட்டத்தை தமக்கு பாராளுமன்ற ஆசனங்களைப் பெறுவதற்கான கோஷமாக்கி, ''வேலை கொடு! அல்லது வேதனம் கொடு!'' என்று அச்சிட்டு கொழும்பிலுள்ள சுவர்களிலெல்லாம் ஒட்டித் தள்ளினார்கள். இரத்தினபுரியிலிருந்தும், மாத்தறையிலிருந்தும் ''வேலை அல்லது வேதனம்'' கேட்டு கொழும்பிலுள்ள பாராளுமன்ற கட்டடத்தை நோக்கி ஊர்வலங்கள் விட்டார்கள். மனுக்கள் சமர்ப்பித்தார்கள்.

அதே நபர்கள் இன்று முக்கூட்டணி அரசாங்கத்தின் அமைச்சர்களாகவும், எம். பிக்களாகவும் ஊர்வலம் வருகிறார்கள். ஆனால், வேலையற்ற வாலிபர்களுக்கு - இவர்களை நம்பி கால்வலிக்க ஊர்வலம் வந்த வாலிபர்களுக்கு வேலையோ அல்லது வேதனமோ கிடைக்கவில்லை.

வேலை தான் பெற்றுக் கொடுக்க முடியவில்லை என்றாலும்கூட வேதனமாவது பெற்றுக்கொடுக்க கெனமன் திரிபுவாத கும்பலுக்கு வக்கில்லை. ஊமைகளாகிவிட்டனர். ஆனால், தமக்கு கார்களுக்காகவும், மேலதிக சம்பளத்துக்காகவும் பாராளுமன்றத்தில் வீர முழக்கம் செய்கிறார்கள். இந்த வெட்கம்கெட்ட நிலையில்தான் தமது கையாலாகாத்தனத்தை மூடிமறைக்க மீண்டும் சுவர்களில் தேசியமய கோஷ போஸ்டர் ஒட்டுகிறார்கள்.

தேர்தலில் வாக்குப் பொறுக்குவதற்காக வேலையற்ற வாலிபர்களை பகடைக்காய்களாக்கி போஸ்டர் ஒட்டி, ஊர்வலம் விட்டபோதே இத்தேர்தல் குண்டை நாம் அம்பலப்படுத்தியிருந்தோம். அன்று தம்மால் ஏமாற்றப்பட்ட வாலிபர்கள், இன்று ''வேலைகொடு! அல்லது வேதனம் கொடு!'' என்ற கோஷத்தை முன்வைத்து வெகுண்டெழுவதைக் காணும் கெனமன் திரிபுவாதக் கும்பல், தமக்கு கைவந்த பல தகிடுதத்தங்கள் மூலம் அவர்களை ஏமாற்ற முனைகின்றனர்.

எல்லாக் காலத்திலும் எல்லோரையும் ஏமாற்ற முடியாது என்பதை தமது அழிவின் மூலம் கெனமன் திரிபுவாத கும்பல் காணும்.

★

## சமசமாஜிகளின் வர்க்க நலன்

உலக வங்கியின் நிர்ப்பந்தத்தின் பேரில் மந்திரி சபை செய்த முடிவே மாற்றப்பட்டு மஸ்கெலியாத் திட்டத்திற்கான கொந்தராத்து சீ. டி. ஈ. கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டுள்ளது யாவரும் அறிந்ததே. இதில் உலக வங்கியின் நிர்ப்பந்தத்திலும் பார்க்க சமசமாஜ மந்திரிகளின் நிர்ப்பந்தம் கூடுதலாக இருந்ததாம். காரணம் மக்கள் வங்கியோடுமட்டுமல்லாது, உலக வங்கியோடும் தொடர்புள்ள ஒரு சமசமாஜக் குடும்பத்திற்கும் சீ. டி. ஈ. கம்பனியில் பெருந்தொகையான பங்குகள் உண்டாம். இதை அறிந்து போர்க்குரல் எழுப்பிய சில சாதாரண சமசமாஜ அங்கத்தவர்களுக்குக் கிடைத்த பதில், ''இந்தக் கம்பனிக்கு வேலை கிடைத்தால் தான் எமது ஆதரவாளர்களுக்கு வேலை கிடைக்கும்!'' பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன், வேஷம் இன்னும் எத்தனை நாட்களுக்கு?

★

## சுயசார்புக் கொள்கை

சுயசார்புக் கொள்கையைப் பற்றி மந்திரிமார் பலர் பிரசங்கங்கள் செய்துள்ளனர். பிரதமரின் புத்தாண்டுச் செய்தியிலும் நாம் முதலில் எமது வளங்களைப் பிரயோசனப்படுத்த வேண்டும்; பின்பு தான் வெளிநாட்டு உதவியைப் பற்றி சிந்திக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், அம்மையாரின் கீழுள்ள திட்டமிடும் அமைச்சில் வெளிநாட்டு உதவிகளைப் பயன்படுத்துவதற்கு ஒரு அதிபரின்கீழ் ஒரு பகுதி இயங்குகிறது. உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்துவதற்கு ஒரு பகுதியுமில்லை; அதிபருமில்லை. உலக வங்கியின் கண்காணிப் பின்கீழ் உருவாக்கப்பட்ட அமைச்சு வேறுவிதமாக இருக்க முடியாது. உலக வங்கியின் ''உதவிகளைப்'' பயன்படுத்தும் விதத்திலேயே இந்த அமைச்சு செயல்படுகிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால் உலக வங்கி இலங்கையைப் பயன்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கத்தின் சம்பளத்தில் இயங்கும் விதத்தில் உருவாக்கப்பட்ட அமைச்சுத்தான் திட்ட அமைச்சு. எனவேதான் இந்த அமைச்சிலுள்ள உயர் அதிகாரிகளுக்கு ஏதாவது காரணத்திற்காக இலங்கை அரசாங்கம் சம்பளம் கொடுக்க மறுத்தால், உலக வங்கி அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கத் தயங்குவதில்லை. இந்த நிலையில்தான் மந்திரிமார்கள் சுயசார்புக் கொள்கையைப் பற்றிப் பிரசங்கங்கள் செய்கிறார்கள்.

★

## வேலையில்லாத் திண்டாட்டம்

55 வயதிற்கு மேற்பட்டவர்களை பென்சன் எடுக்கச் செய்வதன் மூலம் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது போக, இன்னுமொரு புதிய திட்டம் 'தங்க மூளை'க்கு உதவியிருக்கிறதாம். அதாவது ஓவர்டைம் வேலையை நிறுத்தி விட்டு அந்த வேலைக்குப் புதிய ஆட்களை எடுப்பது. தொழிலாளர்களும். லிகிதர்களும் ஓவர்டைம் வேலை செய்வது இன்று கிடைக்கும் சம்பளத்தில் வாழ முடியாதபடியால் தான். வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கைவைக்க வேண்டிய இடங்களில் கைவைக்க விரும்பாதவர்கள் தொழிலாளர்களை மேலும் கஷ்டப்படுத்தி வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்க முயற்சிப்பது அவர்களின் (தங்கமூளையின்) வர்க்க பாசத்தைக் காட்டுகின்றதல்லவா?

★

## பஸ் கட்டணம் உயர்த்தப்படுமா?

இ. போ. ச. பெண் கண்டக்டர்களுடன் புதிய பஸ் சேவைகளை ஆரம்பிக்கப் போவதாக செய்திகள் கூறுகின்றன. முதல் பெண் பிரதமரை தெரிவு செய்த நாட்டில் பெண்கள் கண்டக்டர்களாக வேலை செய்வதில் ஆச்சரியமேற்படாது. ஆனால், யு. என். பி. தேவைக்கதிகமாக ஆட்களை வேலைக்கமர்த்தி விட்டதென்று கூறி பல நூற்றுக் கணக்கான தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்தவர்கள், பெண் கண்டக்டர்களை நியமிக்கப் போவதாகக் கூறுவது வேடிக்கையாக இருக்கிறது.

பெண் கண்டக்டர்கள் நியமிக்கப்படும் பஸ்களின் கட்டணம் உயர்த்தப்படுமாம். நின்றுகொண்டு செல்ல அனுமதிக்கப்படாது, உட்கார்ந்து கொண்டு செல்வதற்குக் கணக்காகத்தான் பிரயாணிகள் ஏற்றப்படுவார்களாம். இது, இ. போ. ச. தலைவர் அடுத்து எடுக்கப்போகும் நடவடிக்கையை-பஸ் கட்டணங்கள் எந்நேரத்திலும் கூட்டப்படலாம் என்பதை - முன்னறிவித்தல் செய்கிறது. நின்றுகொண்டும், மிதிப்பலகையில் தொங்கிக்கொண்டும் செல்வதற்கே பஸ்கள் இல்லையெனக் கூறும் இ. போ. ச. தலைவர், பெண் கண்டக்டர்களை நியமித்து பஸ் கட்டணங்களை உயர்த்துவதற்கு மட்டும் பஸ்களை எங்கே கண்டுபிடித்தார். இது பண வசதியுள்ளவர்கள் சுகமாக பிரயாணம் செய்ய ஏற்பாடு செய்யும் சமசமாஜ சோஷலிஸம் போலும்.

★

## போலிக் கண்டனம்

வியாபார நோக்கங்களுக்காகப் பிரிட்டனில் புத்தரின் உருவத்தை உபயோகித்ததைப் பற்றி ''சன்'' பத்திரிகை கண்டனச் செய்தியொன்றை வெளியிட்டதைத் தொடர்ந்து புத்தகுருமார்களும் மற்றும் சமயப் பிரமுகர்களும் கண்டனங்களைத் தெரிவித்துள்ளனர். பிரித்தானிய அரசுடன் போர் தொடுக்குமளவிற்கு இவர்கள் கண்டனம் சென்றுள்ளது. ஆனால் ''புத்த நாடான'' இலங்கையில் புத்தரின் பெயரால் நடக்கும் மோசடிகள் இவர்கள் கண்ணுக்குப் படவில்லை.

புத்த சமயத்தில் ஒருவித அக்கறையும் இல்லாத கடைக்காரர்கள்கூட புத்தரின் சிலையையோ அல்லது படத்தையோ முக்கியமான இடங்களில் வைப்பது வியாபார நோக்கிற்காகவே. புத்த மதத்தினருக்குத்தான் உயர்ந்த பதவிகள் கொடுக்கப்படவேண்டும் என்று கூறுவதும், பொருளாதாரச் சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட அரசியல் வியாபாரத்திற்காகப் புத்தர் எத்தனை தரம் விற்கப்பட்டாரென்பதையும் நாம் வலியுறுத்த வேண்டிய அவசியமில்லை.

புத்தர் வெளிநாடுகளில் விற்கப்படுவதை கண்டிப்பவர்கள் ''புத்த நாட்டிலேயே'' புத்தர் வியாபாரம் செய்யப் படுவதைத் தடைசெய்ய முன்வருவார்களா? புத்தமத முதலாளிகள் இதற்கு ஒருபொழுதும் உடன்படமாட்டார்கள். ஏனெனில் அவர்களின் நோக்கம் கொள்ளை லாபம். அதற்குப் புத்தரை எவ்வாறு பாவிப்பதென்பதுதான் அவர்கள் பிரச்சினை.

★

## பரீட்சைத் திணைக்களம்

ஜீ. சீ. ஈ. (சாதாரண) பரீட்சையில் நடந்த தில்லுமுல்லுகள் அனைவரும் அறிந்ததே. அண்மையில் நடந்த லிகிதர்கள் இரண்டாம் பிரிவிற்கான கேள்விப் பத்திரமொன்றில் ஒரு கேள்வி ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் ஒரு மாதிரியாகவும் தமிழில் வேறொரு மாதிரியாகவும் இருந்தது.

பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களுக்கு உத்தியோகம் கொடுப்பது கஷ்டம் என்பது காரணமாக மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைவதைக் குறைக்கும் விதத்தில்தான் பரீட்சைத் திணைக்களம் இயங்குகிறது போல் தெரிகிறது. அல்லது பரீட்சைத் திணைக்களத்தில் வேலை செய்பவர்கள் கல்வி மந்திரியின் புதிய மட்டம் தட்டும் (Standardisation) திட்டத்தின் மூலம் பதவி பெற்ற பேர்வழிகளாக இருக்க வேண்டும்.

★

## இழுபறி

குமாரசூரியர் தமிழ்ப் பகுதிகளின் தனிப் பெரும் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டபின் கிழக்கு மாகாணத்திலும் வடக்கு மாகாணத்திலும் தமிழரசு, தமிழ் காங்கிரஸ் எம். பி. மார் சிலரை அணைக்க கடும் முயற்சிகள் எடுப்பதாகத் தெரிகிறது. இந்த எம். பி. மார்களும் பெறக்கூடியதைப் பெறுவோம் என்று குமாரசூரியருடன் அணைகிறார்களாம். இவர்கள் இவ்வாறு பேரம் பேசிக்கொண்டிருக்கும் போது தம்பி செல்வநாயகம் சமசமாஜிகளுடனும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சில மந்திரிமார்களுடனும் பேரம் பேசி இறுதியில் சுதந்திரக் கட்சியில் சேர்ந்துவிட்டார். என்றாலும், தமிழ் மந்திரியார் கிழக்கு மாகாணத்து தமிழரசு எம். பி.யில்தான் கூடிய நம்பிக்கை வைத்துள்ளாராம். செல்வநாயகம் ஒருவரை இடம்மாற்றம் செய்தால் தமிழரசு எம். பி. அதை பழையபடி மாற்றுவிப்பாராம். இதில் தமிழரசு எம். பிக்கு கிழக்கு மாகாண இஸ்லாமிய சோஷலிஸ்ட் முன்னணிப் பிரமுகர் ஒருவரும் உதவியாம். ஏனெனில் இந்தப் பிரமுகரும் தமிழரசு எம். பியும் மட்டக்களப்புப் பகுதியைக் கூறு போட்டுள்ளார்களாம். இந்தக் குத்துவெட்டுக்களில் யார் வெல்வரோ! ஆனால், இவர்கள் மக்களை தொடர்ந்தும், ஏமாற்றிக் கொண்டிருக்க முடியாது என்பது நிச்சயம்.

## இரங்கல்

இலங்கை சினிமா அன்ட் பிலிம் ஸ்டுடியோ தொழிலாளர் சங்கத்தின் (சி.டி.யு.எப்.) சிலோன் தியேட்டர் கிளையைச் சேர்ந்த ரொக்ஸி சினிமா தியேட்டர் தோழர் கணபதிபிள்ளை அவர்களின் அகால மரணத்தையிட்டு சிலோன் தியேட்டர் கிளை தனது ஆழ்ந்த அனுதாபத்தை அவர்தம் குடும்பத்தினருக்கு தெரிவித்துக் கொள்கிறது.

# இன ஒடுக்குமுறையிலிருந்து விடுபட

# தமிழ் மக்களுக்கு புதிய பாதையும், தலைமையும் வேண்டும்

இணைப்பாட்சி எனப்படுகின்ற சமஷ்டி ஆட்சி அமைப்பு முறைதான் ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழுகின்ற இலங்கையைப் போன்ற ஒரு நாட்டுக்கு மிகப் பொருத்தமானதென்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினர் கடந்த இருபதாண்டுகளுக்கு மேலாகத் தங்கள் கொள்கையாகக் கூறி வருகின்றனர்.

சமஷ்டி ஆட்சியை அமைப்பதுதான் தங்கள் இலட்சியம் எனக் கூறிவந்த தமிழ் அரசுக் கட்சியினர், 1957ம் ஆண்டில் காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவுடன் செய்து கொண்ட ஓர் ஒப்பந்தத்தில் 'பிரதேச சபைகள்' அமைப்பதற்கும், பின்னர் 1965ம் ஆண்டில் டட்லி சேனநாயக்காவுடன் செய்து கொண்ட ஓர் உடன்பாட்டில் 'மாவட்ட சபைகள்' அமைக்கவும் ஒப்புக்கொண்டு சமஷ்டிக் கோஷத்திலிருந்து கீழிறங்கினர். 'பிரதேச சபைகள்' அமைக்கப்படுவதற்கு பெரும் எதிர்ப்பைக் கிளப்பிய டட்லி, ஜே. ஆரின் யு. என். பி. கட்சி பின்னர் 'மாவட்ட சபை'களுக்கு ஒப்புக் கொண்டபோது திருமதி சிறிமா பண்டாரநாயக்கா, என். எம். பெரேரா, பீட்டர் கெனமன் ஆகிய கூட்டாட்சிவாதிகள் அதைப் பலமாக எதிர்த்தனர். இவர்கள் சமஷ்டிக் கட்சியினரை மட்டுமல்ல சமஷ்டிக் கோரிக்கையையும், தமிழ் இனத்தையும் கடுமையாகக் கண்டித்து வந்தனர். இப்பொழுது இவர்கள் தமிழ் மக்கள் மீது தங்களுக்கு வெறுப்பு இல்லையென்றும், இந்த நாட்டில் உண்மையான சோஷலிஸத்தை உருவாக்கத் தமிழ் மக்கள் ஆதரவும்-ஒத்துழைப்பும் தரவேண்டுமென்றும் கோருகின்றனர்.

## சமஷ்டி பற்றிய வாதப் பிரதிவாதங்கள்

தமிழர்களின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் 'எப்படியாவது பெற வேண்டுமென்ற' நோக்கத்துடன் இந்தக் கூட்டாட்சிவாதிகள், குறிப்பாக பீட்டர் கெனமன், இலங்கரத்தின, வி. பொன்னம்பலம் போன்றவர்கள் சோஷலிஸத்தில் சமஷ்டி சாத்தியமென்றோ, சோஷலிஸத்தில் சமஷ்டிப் பிரச்சினை தீருமென்றோ கூறி வருகின்றனர்.

அதேநேரம், சமஷ்டியின் பின்தான் சோஷலிஸம் சரிவரும் என்று தமிழரசுக் கட்சியினர் பதிலளிக்கின்றனர். சமஷ்டி பற்றி வாதப் பிரதிவாதங்கள் பேச்சிலும், எழுத்திலும் முன்னெப்போதையும் விட, இப்போது முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. இந்த நாட்டில், தேசிய இனப் பிரச்சனையொன்றும் பிரதான முரண்பாடுகளில் ஒன்றுகக் கூர்மையடைந்து வருகிறது என்ற உண்மையையே இந்த வாதப் பிரதிவாதங்கள் உணர்த்துவதாக இருக்கின்றன.

கடந்த பல வருடங்களாக தமிழரசுக் கட்சியே தமிழ் மக்களுக்குப் பெரும்பாலும் தலைமை தாங்கி வருகிறது. இந்தக் கடந்த காலத்தில், ஆட்சி பீடத்திற்கு மாறி மாறி வந்துள்ள சேனநாயக்கா, பண்டாரநாயக்கா குடும்பங்களுடன் தமிழரசுக் கட்சியினர் பேரம்பேசி சில சலுகைகளைப் பெற்று வந்திருக்கின்றனர். பேரப்பேச்சு, எதிர்ப்பு நடவடிக்கை என்பவை, இவர்கள் தமது வர்க்க நலனைக் கருத்திற்கொண்டு மேற்கொள்ளப்பட்டனவாகும். தமது வர்க்க நலனுக்கான சமரசங்களுக்கும், சலுகைகளுக்கும் இன்றும் இதன் தலைமை காத்திருப்பினும், தமிழ் மக்கள் தாங்கள் 'இரண்டாம் தரப் பிரஜைகளாக நடத்தப்படுகிறோம்' என்றும், இந்த நாட்டில் தமது உரிமைகள் யாவும் ஏனையவர்களைப்போல பூரணத்துவம் உடையதும், சுதந்திரம் உடையதாகவும் இருக்க வேண்டுமென்ற உறுதியான உணர்வுடனும்தான் இருக்கின்றனர். தமிழரசுக் கட்சித் தலைமைப் பீடம் அவ்வப்போது இருந்த அரசாங்கங்களுடன் பேரம்பேசி சலுகைபெற்று

**ஏ. சின்னத்தம்பி**

ஆதரவு கொடுக்க முனைந்த காலங்களிற்கூட, இவர்களுடைய தலைமையைப் பொருட்படுத்தாது தங்களுடைய எதிர்ப்பை ஆணித்தரமாகத் தமிழ் மக்கள் தொடர்ந்து காட்டி வந்திருக்கின்றனர். தமிழரசுக் கட்சியிலேயே இந்த எதிர்ப்பின் பிரதிபலிப்பைக் காணக்கூடிய சந்தர்ப்பங்கள் பல ஏற்பட்டன. தமிழ் மக்களின் தொடர்ந்த—விட்டுக் கொடுக்காத எதிர்ப்பு தமிழரசுக் கட்சியையே தொடர்ந்து எதிர்க்கும் எதிர்ப்பாக மாறி வருவதை உணர்ந்த தமிழரசின் தலைமைப்பீடம், இப்போது புதிய ராகத்தை சோஷலிஸத்தில் தேடுகின்றது.

## முதலாளித்துவ நாடுகளில் சமஷ்டியும், இன ஒடுக்கு முறையும்

தற்சமயம் உலகில் பல்வேறு நாடுகளிலும், பல்வேறு வகைப்பட்ட சமஷ்டி அமைப்புள்ள நாடுகள் உண்டு. முதலாளித்துவ நாடுகள் பல தேசிய இனங்களைக் கொண்ட அரசுகள் கட்டப்பட்டுத் தோல்வியுற்ற அனுபவங்களைக் கண்டிருக்கின்றது. பழைய ஆஸ்திரிய—ஹங்கேரிய சாம்ராச்சியங்களின் வீழ்ச்சி பல அனுபவங்களைக் கூறும். இன்று அமெரிக்கா, கனடா, இந்தியா போன்ற (பாராளுமன்ற ஜனநாயக ஆட்சி அமைப்பை இந்த நாடுகள் பின்பற்றுவதாக இவர்கள் போற்றுகிறார்கள்) நாடுகளை இரு பகுதியினரும் (கூட்டாட்சி வாதிகளும், சமஷ்டியினரும்) உதாரணத்திற்கு எடுத்துக் கொள்ளாததும், சோஷலிஸ நாடுகள் என்று கூறிக் கொள்ளும் நாடுகளையே எடுத்துக் காட்டாகக் கூறிக்கொள்வதும் சோஷலிஸம் ஒன்றினால்தான் பிரச்சனையைத் தீர்த்துக் கொள்ள முடியுமென்பதாகிறது.

மனிதனை மனிதன் சுரண்டும் வர்க்கப் பிரிவினையுள்ள முதலாளித்துவ அமைப்பு நாடுகளில் சமஷ்டி அமைப்பு மூலமோ, வேறு எந்த அமைப்பு மூலமோ தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஒரு போதும் முடியாது. முதலாளித்துவ அமைப்பைக் கொண்டுள்ள நாடுகளில் சுரண்டலும், பாகுபாடும், பிரிவினையும் தொடர்ந்து நிலவும். கிராமத்துக்குக் கிராமம், கிராமத்திற்கும் நகரத்திற்கும், இனத்திற்கு இனம், மனிதனுக்கு மனிதன் சுரண்டல், வேறுபாடு, பகைமை, அடக்குமுறை ஆகியவை தொடர்ந்து இருக்கும்; வளர்ச்சி பெறும்.

அமெரிக்கா, இந்தியா, கனடா போன்ற நாடுகளில் சமஷ்டி அமைப்பு முறை தோன்றிப் பல ஆண்டுகளாகியும் தினசரி அங்கு குழப்பங்கள், பயங்கரக் கொலைகள், இனக் கலவரங்கள் நடந்து கொண்டேயிருப்பது இதற்குத் தக்க சான்று.

## மகத்தான லெனின், ஸ்டாலின் தலைமையில் சோவியத் யூனியன் தீர்வு கண்டது

இதனிலும் மோசமாக உலகமே அதிர்ச்சியடையக்கூடிய முறையில் இன ஒடுக்குமுறை, ஜார் ரஷ்யாவில் நிலவியது. தேசிய இனங்களின் சிறைச்சாலையாக அது விளங்கியது. இந்த நிலையை மகத்தான தலைவர் லெனினதும், துணைவர் ஸ்டாலினதும் தலைமையில் ஒக்டோபர் புரட்சி முற்றுக மாற்றியமைத்து சகல இன மக்களும் சகோதரத்துவத்துடன் வாழும் மக்களின் சோவியத் யூனியனுக மாறி உலகத்திற்கு ஒரு புதிய பாதையைக் காட்டியது.

தேசிய இனப் பிரச்சனைக்கு வெற்றிகரமாகத் தீர்வு கண்ட சோவியத் யூனியனையும் அதன் மகத்தான தலைவரான காலஞ்சென்ற ஸ்டாலின் அவர்களையும் உலகம் போற்றியது. தலைவர் ஸ்டாலின் அவர்கள் மறைந்தபோது, உலகம் முழுவதிலிருந்தும் அவருக்கு ஆழ்ந்த அனுதாபங்கள் தெரிவிக்கப்பட்டன. இலங்கையிலிருந்து எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களும் தந்திச் செய்தியொன்றை அனுப்பியிருந்தார். அவர் தமது தந்தியில் தேசிய இனப் பிரச்சனை பற்றியும் குறிப்பிட்டிருந்தார் என்பது கவனிக்கக் கூடியதாகும்.

## சோவியத் யூனியனில் ஒடுக்குமுறை ஏன்?

இன்று நிலைமை என்ன? சோவியத் யூனியனும் அதன் வழிவந்த செக்கோஸ்லவாக்கியா, யூகோஸ்லாவியா போன்ற ஏனைய நாடுகளும் (சீனு, அல்பேனியா தவிர) நீண்ட பல ஆண்டுகளுக்குப் பின்னர், மீண்டும் தேசிய இனப் பிரச்சனையை எதிர்நோக்கியுள்ளன — நெருக்கடிகளை எதிர் நோக்குகின்றன.

மகத்தான தலைவர் ஸ்டாலினின் தலைமையிலிருந்த சோவியத் யூனியன் ஆரம்பத்தில் பல தேசிய இனங்களின் யூனியனுக இருந்தது. சோஷலிஸ நிலைமைகளிலும், சமத்துவம், சுயவிருப்பம் ஆகிய அடிப்படையிலும் மாத்திரமே இத்தகையதொரு யூனியன் நிறுவப்பட்டும், ஸ்திரப்படுத்தப்பட்டும், வளர்க்கப்பட்டும் இருந்தது. ஸ்டாலினுக்குப் பிறகு, துரோகி குருஷேவ்வினுல் ஏற்பட்ட எதிர்ப் புரட்சி மாற்றம் மீண்டும் முதலாளித்துவ அமைப்பு முறைக்கு மாற்றப்பட்டுள்ளதால், ஏனைய நெருக்கடிகளைப் போல தேசிய இனங்கள் மத்தியிலும் நெருக்கடிகள் அங்கு தோன்றியுள்ளன. சிறுபான்மைத் தேசிய இனங்கள் அடக்கப்படுகிறார்கள். பாகுபாடு, பலவந்தக் குடியேற்றம், பிளவுபடுத்தல், சிறைவைத்தல், போன்ற நிலைமைகள் அங்கு சாதாரணமாகிவிட்டன. மீண்டும் சகல தேசிய இனங்களினதும் சிறையாக மாறிவருகிறது. இன்றைய சோவியத் யூனியன்.

இதே நிலைமைக்கு சோஷலிஸ நாடுகள் என்று கூறிக் கொள்ளும் ஏனைய நாடுகளும் (சீனு, அல்பேனியா தவிர) வந்துள்ளன. இந்த நாடுகளிலும் இதே நிலைமைகள் தலைதூக்கி நெருக்கடிக்குள்ளாகியுள்ளன.

இந்த நாடுகள் எமக்குக் கற்றுத் தருவது என்ன? முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ அமைப்பு முறையில், இன ஒடுக்குமுறை ஏனைய ஒடுக்குமுறைகளைப் போன்றதே. முதலாளித்துவ அமைப்பு முறையில் தேசிய இனப் பிரச்சனை வெற்றி பெறுது. சோஷலிஸ அமைப்பாலோ அதற்கு முன்னேடியாக விளங்கும் மக்கள் ஜனநாயக அமைப்பாலோ தான் தேசிய இனப் பிரச்சனைக்குத் தீர்வுகாண முடியும் என்று கற்றுத் தரும் அதே நேரத்தில், இந்த அமைப்பிறகு ஆபத்து ஏற்பட்டு பட்டு அங்கு சோஷலிஸ அல்லது மக்கள் ஜனநாயக அமைப்பிற்கு மாறுபட்ட முதலாளித்துவ அமைப்பு புகுத்தப்படுமானல் மீண்டும் பிரச்சனைகள் தோன்றும் என்பதாகும்.

## மார்க்சிஸம்-லெனினிஸம்-மாசேதுங் சிந்தனை போதிப்பதென்ன?

சோஷலிஸத்தினதும், மக்கள் ஜனநாயக அமைப்பினதும் பாதை எது?

ஒரு நாட்டில், தொழிலாளி வர்க்கம் அல்லாத ஏனைய வர்க்களினது தலைமையாலும் ஓர் ஆயுதப் புரட்சியை நடத்த முடியும். ஆனல் சோஷலிஸப் புரட்சியையோ, மக்கள் ஜனநாயகப் புரட்சியையோ தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில், விவசாயிகளதும், இதர வர்க்கங்களினது புரட்சிகரப் பகுதியினதும் உறுதுணையுடன், ஆயுதப் போராட்டத்தின் மூலம் தான் நிலைநிறுத்த முடியும். உலகப் பூராவும் சோஷலிஸம் வெற்றி பெறும்வரை கம்யூனிஸம் தோன்றும்வரை பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் மூலம் அந்த நாடுகளைப் பாதுகாக்க வேண்டும். சோவியத் யூனியனில் நிகழ்ந்தது போன்று எதிர்ப் புரட்சி நிகழாமல் எந்நேரமும் விழிப்பாக இருக்க வேண்டும் என்பதையே

6-ம் பக்கம் பார்க்க

# தென் கிழக்கு ஆசியா முழுவதுமே புரட்சிகர ஆயுதப் போராட்டத் தீ பரவுகிறது

தென் கிழக்கு ஆசிய நாடுகளின் மக்கள், கிராமப்புறத்திலிருந்து நகரங்களைச் சுற்றி வளைத்துக் கைப்பற்றுவதற்கு நடத்தும் ஆயுதப் போராட்டத்திற்கு மூலகாரணமாக உள்ளது அந்தந்த நாடுகளின் மார்க்ஸிஸ்ட் - லெனினிஸ்ட் புரட்சிகர கட்சிகளினதும், ஸ்தாபனங்களினதும் தலைமைப் பீடமே! அவர்கள் தங்களின் போராட்டத்தின் முன்னணியை அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும், சோவியத் சமூக ஏகாதிபத்தியத்துக்கும், அந்தந்த நாடுகளின் பிற்போக்குவாதிகளுக்கும் எதிராக முன்னெடுத்துச் செல்கிறார்கள். இன்று, அதிகம் அதிகமாக வளர்ந்து வரும் தென்கிழக்கு ஆசிய நாட்டு மக்களின் புரட்சிகர ஆயுதப் போராட்டம் உலகப் புரட்சி என்னும் புயலில் ஓர் அதி முக்கியமான அம்சமாகத் திகழ்கிறது. கீழ்வருவன கடந்த ஆண்டின் ஆரம்பத்திலிருந்து நடந்துவரும் ஆயுதப் போராட்டங்களின் விபரமாகும்.

மகத்தான 1970ம் ஆண்டுகளின் முதல் வருடத்தில் மக்களின் புரட்சிகர ஆயுதப் போராட்டத் தீ தென்கிழக்கு ஆசிய நாடுகள் முழுவதும் வெகுவாகப் பரவிவருகின்றது. அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் தேசிய விடுதலைக்காகவும் வியட்நாம், லாவோஸ், கம்போடிய மக்களினால் நடத்தப்படும் யுத்தமும், பர்மா, தாய்லாந்து, மலாயா, பிலிப்பைன்ஸ், இந்தியா, இந்தோனேஷியா, வடக்கு காளிமாந்தன் ஆகிய நாட்டு மக்களின் புரட்சிகர ஆயுதப் போராட்டமும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் படுபிற்போக்கு ஆட்சியையும், அதன் ஏவல் நாய்களையும் தீவிரமாகத் தாக்கும் எதிர்க்க முடியாத பேரலைகளாக அமைந்துவிட்டன. பல தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மக்களினதும் தீவிரமாகப் பரவும் புரட்சிகர ஆயுதப் போராட்டத்தின் சாதகமான நிலைமை தலைவர் மாவோவின் மகத்தான தத்துவத்திற்கு சாட்சியாக அமைகிறது. அவர் சொன்னார்: இன்று புரட்சியே உலகின் பிரதான போக்காகத் திகழ்கிறது.

## தீவிரமாகப் பரவும் ஆயுதப் போராட்டம்

அமெரிக்க ஆக்கிரமிப்பிற்கு எதிராகவும், தேசிய விடுதலைக்காகவுமான போரில் 1960ம் ஆண்டின் ஆரம்பகாலத்திலிருந்தே வீரமிக்க தென்வியட்நாமிய ஆயுதப் படைகளும், மக்களும் தீரமுடன் திகழ்ந்து வருகிறார்கள். உலக மக்கள் அமெரிக்க ஏகாதியத்தியத்திற்கு எதிராக நடத்தும் போராட்டத்தில் தங்களின் பங்காக தென்வியட்நாமிய மக்கள் ஆயிரக்கணக்கான அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைகளையும், அவர்களின் பொம்மைப் படைகளையும், உதவிப் படைகளையும் அழித்தொழித்ததோடு மட்டுமல்லாமல் பல்லாயிரக்கணக்கான அமெரிக்கப் படையினரையும் செயலற்றவர்களாக ஆக்கியுள்ளார்கள். வியட்நாமிலும், லாவோஸிலும் வெற்றிகாண முடியாத அமெரிக்க ஏகாதிபத்தியம் கம்போடியாவில் ஒரு ராணுவச் சதியைத் தோற்றுவித்து அந்த நாட்டை ஆக்கிரமிப்பதற்கென தனது படைகளை அனுப்பியது. இப்படிச் செய்வதன் மூலம் தென் வியட்நாமிலும், லாவோஸிலும் தோல்வியிலிருந்து தன்னைப் பாதுகாக்க முடியும் என்று மனப்பால் குடித்தது. ஆனால், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மன்னிக்க முடியாத இந்தச் செயலானது இந்தோசீன மூன்று தேச மக்களினதும் எதிர்க்க முடியாத அளவு கடந்த ஆத்திரத்தைக் கிளப்பியதோடு, தோளோடுதோள் சேர்ந்து போர்புரியும் அம் மக்களின் தேசங்களில் மிகவும் சாதகமான ஓர் நிலையையும் தோற்றுவித்துள்ளது. தென் வியட்நாமில் யுத்தத்தை வியட்நாமியர் மயமாக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சதியானது படுமோசமாகத் தோல்வி கண்டுள்ளது. லாவோஸில், முக்கியம் வாய்ந்த ஜார் - க்ஸிங், கொயாங் பீடபூமியைத் திரும்பக் கைப்பற்றிய பின்பு, தேசபக்த படைகளும், மக்களும் முக்கியமான நகரங்களான அத்தபியூ, ஸரவனே ஆகியவற்றையும் மீட்டு கிழ் லாவோஸில் விடுதலையாக்கப்பட்ட பிரதேசங்களை அதிகரித்துள்ளனர். கடந்த ஆறுமாதங்களாக உக்கிரமமாகப் போர் புரியும் கம்போடிய தேசபக்த ஆயுதப் படைகள் தமது தேசத்தின் மூன்றில் இரண்டு பங்கிற்கு அதிகமான பிரதேசத்தை விடுதலையாக்கி உள்ளதோடு 38,000 அமெரிக்க ஆக்கிரமிப்பு - சைகோன் பொம்மைத் துருப்புகள் உட்பட சுமார் ஒரு லட்சத்துப் பத்தாயிரம் எதிரிப் படையினரை துவம்சம் செய்தும் சிதறடித்தும் உள்ளனர். இந்தோசீனம் முழுவதிலும் உள்ள போர்க்களங்கள் அனைத்தும் இப்பொழுது இணைக்கப்பட்டு அமெரிக்க ஆக்கிரமிப்புத் துருப்புகளுக்கும், அவர்களின் காவல் நாய்களினதும் மயானத் திடலாக அமைக்கப்பட்டுள்ளது.

## பர்மா

பர்மியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின்கீழ் அந்நாட்டு மக்களின் புரட்சிகர ஆயுதப் போராட்டம் கடந்த மார்ச் மாதத்தில் 23வது வருடத்தில் வெற்றிகரமாகப் பிரவேசித்துள்ளது. இந்த ஆண்டில், பர்மியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின்கீழ் அமைந்த மக்கள் ஆயுதப் படைகளும், மற்றும் பல இன மக்களின் ஆயுதப் படைகளும் நாட்டின் பல பகுதிகளிலும் தமது எதிர்த் தாக்குதல் நடவடிக்கைகளை பரந்த ரீதியில் அதிகரித்துள்ளன. கடந்த ஆண்டின் முதல் ஆறுமாத காலப்பகுதியில் அவர்கள் பிற்போக்கு பர்மிய ராணுவத்தினரை 100க்கும் அதிகமான இடங்களில் போரில் ஈடுபடுத்தியுள்ளார்கள். இவற்றில் சில போர்களில் ராணுவத்தின் பிரிவுகள் சிலவற்றை முற்று முழுதாக அழித்தொழித்துள்ளார்கள். ஆயுதப் போராட்டம் பல ஆண்டுகளாக நடக்கும் பெகு, இரவாடி, அறகன், தெனஸ் ஸெறிப் முதலிய பகுதிகளில் சுறுசுறுப்பாக உள்ளதோடு நில்லாமல், மக்கள் ஆயுதப் படைகள் மேற்கு பர்மாவில் உள்ள ஸான் ராஜ்யத்திற்கும் தங்கள் போராட்டத்தை விஸ்தரித்துள்ளதோடு அமோகமான வெற்றிகளையும் ஈட்டியுள்ளார்கள்.

## தாய்லாந்து

தாய்லாந்து கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின் கீழ் கடந்த ஐந்து ஆண்டுகளாக வீரமுடனும் உறுதியுடனும் போர் புரிந்து வரும் அந்நாட்டு மக்கள் தங்களின் மக்கள் விடுதலைச் சேனையை தற்பொழுது அமைத்துள்ளதோடு நாட்டின் அரைப் பகுதிக்கு மேற்பட்ட மாகாணங்களில் 150க்கும் அதிகமான பிரதேசங்களின் அதிக பகுதிகளில் ஆயுதப் போராட்டம் நடத்தியும் வருகிறார்கள். தளப் பிரதேசங்களை அவர்கள் நிறுவியுள்ளதோடு மக்கள் அரசியல் அதிகாரத்தையும் சில இடங்களில் அமைத்துள்ளார்கள். கடந்த ஐந்தாண்டுகளில் 3000க்கும் அதிகமான சண்டைகளில் ஈடுபட்டுள்ள இத் தேசபக்த படையினரும், மக்களும் 55.00க்கு மேற்பட்ட எதிரிப் படையினரை அழித்தொழித்துள்ளார்கள். கடந்த ஆண்டின் முதல் ஆறுமாதங்களில் மட்டும் 600க்கும் அதிகமான எதிரிப் படையினரைக் கொன்று 30க்கும் அதிகமாக எதிரி விமானங்களை சுட்டு வீழ்த்தியோ நாசம் செய்தோ உள்ளார்கள்.

## மலாயா

மலாயா கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையின்கீழ் நீண்டகாலமாகப் புரட்சிகர ஆயுதப் போராட்டத்தில் மலாயா மக்கள் ஈடுபட்டுள்ளார்கள். புரட்சிகர தளப் பிரதேசங்களும், ஆயுதப் போராட்டப் பிரதேசங்களும் சிறிது சிறிதாக வளர்ந்து வருகின்றன. மக்கள் ஆயுதப் படைகள் பெரக், கெடா, கெலந்தான், பெர்லிஸ் ஆகிய இடங்களிலும் தாய்லாந்தை அண்டியுள்ள பிரதேசங்களிலும் கொரில்லா போரில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுள்ளன. கடந்த ஆண்டின் பெப்ரவரிக்கும், ஜூனுக்கும் இடைப்பட்ட காலத்தில் மட்டும் மக்கள் ஆயுதப் படைகள் சுமார் 250 எதிரிப் படையினரை ஒழித்துக் கட்டியதோடு மூன்று எதிரி விமானங்களை சுட்டு வீழ்த்தியோ நாசம் செய்தோ உள்ளனர்.

## பிலிப்பைன்ஸ்

1968ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் புனருத்தாரணம் செய்யப்பட்ட பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சி, அந்நாட்டு மக்களை புரட்சிகரப் போராட்டத்தில் சுறுசுறுப்பாக வழி நடத்திச் செல்கிறது. அதன் விளைவாக பிலிப்பைன்ஸ் மக்களின் புரட்சிகர ஆயுதப் போராட்டத்தில் ஓர் புதிய தீவிர நிலைமை தோன்றியுள்ளது. 1969ம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்ட பிலிப்பைன்ஸ் புதிய மக்கள் சேனை கொரில்லா போர் முறையை மத்திய லுஸோன் என்ற இடத்தில் பரந்துபட்ட முறையில் விஸ்தரித்து மற்றும் ராலெக், பம்பங்கா, சம்பலெஸ் உட்பட ஏழு மாகாணங்களில் ஆயுதப் போராட்டத் தீயைப் பரப்பியுள்ளது. மக்கள் ஆயுதப் படைகள் வட லுஸோன், தென் லுஸோன்; விசயன் தீவுகள் மற்றும் தேசத்தின் தென் பகுதியிலுள்ள மின்டனுவோ ஆகிய பகுதிகளிலும் வேகமாக இயங்கி வருகின்றன.

## இந்தியா

50 கோடி ஜனத்தொகை கொண்ட இந்தியாவிலும், இந்திய மக்கள் நிலப் புரட்சியை மையமாக வைத்து விவசாய ஆயுதப் போராட்டம் நடத்தி வருவதோடு இந்திய பிற்போக்கு வாதிகளின் கொடிய அடக்கு முறையையும் எதிர்த்துப் போராடி வருகிறார்கள்.

## இந்தோனேஷியா

இந்தோனேஷிய கம்யூனிஸ்ட் கட்சி 1967ம் ஆண்டிலிருந்து புரட்சிகர இந்தோனேஷிய மக்களை பாசிஸ சுகார்த்தோ ராணுவக் கும்பலின் பிற்போக்கு ஆட்சிக்கு எதிராக விரிவடைந்து வரும் ஆயுதப் போராட்டத்தில் வழி நடத்திச் செல்கிறது. கடந்த ஆண்டின் ஆரம்பத்திலிருந்து மக்கள் ஆயுதப் படைகள், மேற்கு காளிமாந்தன், ஜாவா, சுமத்ரா, சூலவெசி மற்றும் முக்கிய தீவுகளில் மிகவும் கஷ்டமான சூழ்நிலைகளின் கீழ் இயங்கி வருகின்றன. கிராமப் புறங்களில் எதிரியைத்தொடர்ச்சியாகத் தாக்குவதற்கென கொரில்லாப் படைகளையும், தற்காப்புப் படைகளையும் அமைத்துள்ளார்கள்.

ஆயுதப் போரில் ஈடுபட்டுள்ள வடக்கு காளிமாந்தன் மக்கள் 1965ம் ஆண்டு அக்டோபர் 25ல் வட காளிமந்தன் மக்கள்சேனையை ஸ்தாபித்தனர். இந்தோனேஷியாவை அண்மியுள்ள பகுதிகளில் கொரில்லாத் தளங்கள் அமைத்துள்ளார்கள். சமீப வருடங்களில், மக்கள் ஆயுதப் படைகள் தங்கள் போராட்டத்தை சரவாக்கின் முதலாம் இரண்டாம் மூன்றாம் டிவிசன்களுக்கு விஸ்தரித்ததோடு, இந்தோனேஷிய. மலாயா பிற்போக்கு அதிகாரிகளின் கூட்டு முயற்சியில் அமைந்த ''சுற்றி வளைத்து அடக்குதலை'' யும் முறியடித்துள்ளனர். சரவாக் கொரில்லாப் படையினரின் துரித வளர்ச்சி அபரிதமாக இருப்பதாகவும், 5000த்திற்கு மேற்பட்ட பிற்போக்கு பாசிஸத் துருப்பினரையும், பொலிசாரையும் அவர்கள் எதிர்த்துப் போரிட்டுள்ளதாகவும் மேற்கத்திய முதலாளித்துவப் பத்திரிகைகள் பீதியில் சமீபத்தில் ஊளையிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

''ஒரு பெரும் இராட்சதன் போல் தோற்றமளிக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியம், உண்மையில் இன்றைய நிலையில் ஜீவ மரணப் போரின் விளிம்பில் நின்று தடுமாறும் ஒருகடுதாசிப் புலியாகும்'' என்று மாஓ போதித்துள்ளார். கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக, அமெரிக்க ஏகாதிபத்தியம் என்ற பெரிய ராட்சதன் ஆசிய நாட்டு மக்களின் இரும்புக் கரங்களினால் திரும்பத் திரும்பத் தாக்கப்பட்டு ஒரு மாமிசப் பிண்டமாக ஆக்கப்பட்டுள்ளதோடு அதன் கடதாசிப் புலி தன்மையும் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. 1950ம் ஆண்டுகளின் ஆரம்பகாலத்தில், வெல்லற்கரிய வீரன் போல் பசாங்கு பண்ணிய தள்ளாடும் அமெரிக்க ஏகாதிபத்தியம் கொரியாவுக்கு எதிராக ஆக்கிரமிப்பு யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டது. இதில் முழுதாகத் தோற்கடிக்கப்பட்டது. 1960ம் ஆண்டுகளில் வியட்நாமிற்கு எதிரான ஆக்கிரமிப்பு யுத்தத்தில் பாரதூரமான முறையில் சிதறடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் மோசமாகி வரும் குழப்ப நிலைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் தள்ளப்பட்டு என்றுமில்லாதவாறு தனிமைப்பட்டுள்ளது. இப்பொழுது, மகத்தான 1970ம் ஆண்டுகளின் முதல் ஆண்டிலேயே அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிரான போரில் உலகம் முழுவதிலும் ஓர் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது. இது போன்ற அதியுன்னத நிலையில், தானுக ராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் சரி அல்லது ''ஆசியர்களுக்கு எதிராக ஆசியர்கள் போரிடும் முறை''த் திட்டத்தில் தனது ஏவல் நாயான ஜப்பானிய ராணுவ வாதத்தை முன்னணியில் நிறுத்திப் போரிடவைத்தாலும் சரி அமெரிக்க ஏகாதிபத்தியம் பயங்கரமான் தோல்வியே அடையும் என்பதை உறுதியாகக் கூறலாம். ஆசியாவில் உள்ள பல நாட்டு மக்களும் அமெரிக்க ஏகாதியத்தியத்தையும் அதன் ஏவல் நாய்களையும் அவர்களின் சவக்குழிக்கு அனுப்புவதற்கான போராட்டத்தில் மேலும் மேலும் மகோன்னத வெற்றிகளை வெல்லுவார்கள் என்பது நிச்சயத்திலும் நிச்சயம்.

# "இந்தியாவின் சீன யுத்தம்"

சென்ற வாரதொடர்

## மக்கள் சீனம் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வுகாண முயற்சித்தது

## இந்திய பிற்போக்காளர்கள் மோதலுக்கு வழிவகுத்து படுதோல்வி அடைந்தனர்

இந்திய—சீன எல்லைத் தகராறு வளர்ந்து, போராக மாறிய வரலாற்றை விரிவாகவும், விளக்கமாகவும் எடுத்துரைக்கும் நெவில் மாக்ஸ்வெல் இந்தியாவின் முதலாவது நேருவையும் அவரது வெளிவிவகார அமைச்சு உயர் அதிகாரிகளையும் பலவிடங்களில் தோலுரித்துக் காட்டியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அதே வேளையில் வெறுமனே கண்மூடித்தனமாக அல்லாது, இப்பிரச்சனையை நல்ல முறையிலே தீர்த்து வைக்கவேண்டியதன் அவசியத்தை நினைவூட்டிய சில இந்திய அதிகாரிகளைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார் மாக்ஸ்வெல்.

உதாரணமாக இந்தியாவின் முதல் செக்ரடரி ஜெனரலாகப் பணியாற்றி இளைப்பாறியவரும், பம்பாயின் கவர்னராகப் பணியாற்றியவருமான ஜி. எஸ். பாஜ்பாய், 1952ல் வெளி விவகார அமைச்சிற்கு எழுதிய கடிதமொன்றை மாக்ஸ்வெல் சுட்டிக் காட்டுகிறார். அந்தக் கடிதத்திலே, மக்மோகன் எல்லைக்கோடு பற்றிய பிரச்சனையை சீன அரசாங்கத்துத்துடன் எழுப்பி விவாதிக்க வேண்டுமென்று, இந்திய அரசாங்கத்துக்குப் புத்தி கூறினார் பாஜ்பாய். பிரிட்டிஷ் காலனி ஆட்சியில் பயிற்றப்பட்ட அந்த நிர்வாகியின் உள் நோக்கம் என்னவாயிருந்திருக்கக் கூடுமாயினும், வரலாற்றுணர்வு அவர் கூற்றிலே காணப்படுவதை மறுக்க வேண்டியதில்லை.

''சீனா மீது ஆக்கிரமிப்பு நடத்திய ஏகாதிபத்திய அரசான பிரிட்டன், சீனா மீது ஏற்படுத்திய தழும்புகளில் மக்மோகன் எல்லைக்கோடும் ஒன்று. சீனாவைப் பங்கப்படுத்த முனைந்தோர் வெட்டிய காயத்தின் தழும்பு அதுவாகும். எல்லையைச் சீரமைக்கும் அடிப்படையில், அத் தழும்பினைக் குணப்படுத்தவோ அல்லது துடைத்தழிக்கவோ எவர் முயற்சித்தாலும் அது உகந்ததல்ல.''

இத்தகைய குரல்கள் அவ்வப்போது எழும்பியது. எனினும், பாஜ்பாயின் யோசனையை மக்கள் சீனக் குடியரசிலே இந்தியத் தூதராக இருந்த சர்தார் கே. எம். பணிக்கர் நேருவின் நெருங்கிய அரசியல்-ஆலோசகராயும் குடும்ப நண்பராயுமிருந்த திவான்—எதிர்த்து ஆலோசனை நல்கினார். சீனாவின் ''நண்பன்'' என்று சில திரிபுவாதிகள் ஒரு காலத்தில் பாராட்டிய பணிக்கர் அந்தரங்கக் குறிப்பு ஒன்றிலே எழுதியிருப்பதை மாக்ஸ்வெல் அம்பலப்படுத்தியிருக்கிறார், ஆமாம், சீனாவின் நண்பனாகச் சில காலம் நடித்த பணிக்கர் என்ன எழுதினார் தெரியுமா?

''சீனா இப்பிரச்சினையை எழுப்புமேயானால் அது பற்றி விவாதிக்க முடியாது என்று நாம் தெளிவாக மறுத்து விடலாம். மக்மோகன் எல்லைக் கோட்டிற்கு இப்பால் உள்ள பகுதி எங்களுடையது என்றும், அது பற்றி விவாதிக்கத் தேவையில்லை என்றும், பிரதமர் (நேரு) விடுத்த அறிக்கையின்படி நமது நிலையினை எடுக்க வேண்டும்.''

பணிக்கர் போன்றவர்கள் இந்தியத் தூதுவர்களாய் சீனத் தலைநகரில் இருந்து கொண்டு எத்தகைய ''நல்லுறவு'' வளர்த்திருப்பார்கள் என்பதை இந்த இரகசியக் குறிப்பு எடுத்துக் காட்டுகிறது. பணிக்கரிலிருந்து கோ. பார்த்தசாரதிவரை சீனாவில் கடமையாற்றிய இந்தியத் தூதர்கள் அனைவரும் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றியவர்களாகவே இருந்தனர்.

இவ்வாறு எல்லைகளை விவாதிக்க மறுக்கும் மனோபவத்திலேயே சமீப காலம்வரை நேபாளத்தில் இந்திய அரசு தனது இராணுவ காவல் சாவடிகளை நிறுத்தியிருந்தது. இடைவிடாத ஆட்சேபனையின் பேரிலேயேநேபாள எல்லையிலிருந்து சில வாரங்களுக்குமுன் இந்தியா தனது இராணுவ சாவடிகளைப் பின் வாங்கியது. இப்போது வியாபாரத்துக்கு இடையூறு உண்டாக்கி வருகிறதாம். சுருங்கச் சொன்னால் இக்காலப் பகுதி நிகழ்ச்சிகளையும், நேருவின் பகிரங்கச் சொற்பொழிவுகளையும் தொகுத்து, ''மோதுதலுக்கு வழிவகுக்கும் பாதை''யில் இந்தியா விடாப்பிடியாகச் சென்று கொண்டிருந்தது என்பதை இனி எவரும் சந்தேகிக்க இயலாத முறையில் நிரூபித்து விட்டார் மாக்ஸ்வெல்.

இந்தியாவைப் பற்றி இவ்வாறு பல கோணங்களிலிருந்து சாங்கோபாங்கமாக எழுதியுள்ள மாக்ஸ்வெல் சீனா பற்றி என்ன கூறுகிறார் என்பதை இனிக் கவனிப்போம். இந்தியத் தரப்பிலே அடிக்கடி இரட்டைப் பேச்சும், கொள்கை மாற்றமும், வாய்ச்சவடாலும் இருந்து வந்தபோதும், சீனத் தரப்பில் நிதானமும் உறுதிப்பாடும் இருந்தது என்பதைப் பெரிதும் வற்புறுத்துகிறார் மாக்ஸ்வெல்.

எத்தனையோ முரண்பாடுகள் இருந்த போதிலும், வடகிழக்குப் பகுதியில் மக்மோகன் எல்லைக் கோட்டினை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாகச் சீனா தெரிவித்தது என்றும், ஆனால், லடாக் பிராந்தியத்தில் தனது உரிமையை விட்டுக் கொடுக்க அது ஒருபோதும் தயாராக இல்லையென்றும் மாக்ஸ்வெல் கூறியுள்ளார். அது மட்டுமல்ல, அக்சாய்-சின் பிராந்தியத்தில் இந்தியா விட்டுக் கொடுத்தால், மக்மோகன் எல்லைக் கோட்டில் தான் விட்டுக் கொடுக்கத் தயாராய் இருப்பதாகவும், அதாவது, பரஸ்பரம் பேச்சு வார்த்தைக்கு இணங்குவதாகவும்—சீனா கடைசிவரை கூறி வந்தது. திபேத்தில் நிலப்பிரபுக்கள் சார்பில் தலைமை வகித்து கலகக் கொடியை உயத்தியபின் கள்ளத்தனமாக இந்தியாவுக்குள் ''தஞ்சம் புகுந்த'' தலைலாமாவுக்கு இந்திய அரசாங்கம் நேரடியாகவும் வெளிப்படையாகவும் ஆதரவு வழங்கிய பின்னரும் - 1960ம் ஆண்டிற்கூட, பேச்சு வார்த்தைகள் நடத்த மக்கள் சீனப் பிரதமர் சூஎன்-லாய் ஆயத்தமாய் இருந்தார் என்று மாக்ஸ்வெல் சுட்டிக்காட்டுகிறார்.

சீனாவின் இராணுவம் பற்றி அண்மையில் நூலொன்று எழுதியிருக்கும் ஜோன் கிற்றிங்ஸ் இதுபற்றிப் பின்வருமாறு சுவையாக எழுதுகிறார்.

''இக்காலகட்டத்திலும் (1960 - 61) சீனத் தரப்பினர் உடன்பாட்டுக்கு ஆயத்தமாயிருந்தனர். ஆனால், இந்தியர்களோ மறுத்துவிட்டனர்; மறுத்தது மட்டுமன்றி, காரணமில்லா உணர்ச்சிப் போக்கினால் உந்தப்பெற்ற நம்பமுடியாத இராணுவ முட்டாள்தனத்துடன், பிரச்சனைக்குரிய பிரதேசங்களில் முன்னேறிச் செல்லுங் கொள்கையைக் கட்டவிழ்த்துவிட்டனர்; இதுவே அடுத்த இலையுதிர் காலத்தில் போரைத் தூண்டிவிட்டது.''

சுருங்கக் கூறுவதானால், சீனாவிற்கும், இந்தியாவிற்கும் இடையேயான சர்வதேச எல்லையானது பிரச்சனைக்குரியது என்று எப்பொழுதுமே சீனா கூறிவந்ததென்றும், அதனைப் பரஸ்பரப் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்க்க வேண்டும் என்று சீனா கொள்கை மாறாது கூறியது என்றும் மாக்ஸ்வெல் குறிப்பிடுகிறார்.

எல்லைத் தகராற்றுக் காலப் பகுதி முழுவதிலும் சீனாவின் நடத்தை கட்டுப்பாடாகவும் ஒரு சீராகவும் இருந்தது என்பது இப்பொழுது மேல்நாட்டுப் பத்திரிகையாளர் பலரால் ஏற்றுக்கொள்ளப்படுவதொன்று. ஆயினும், நேரு அரசாங்கத்தைப்பற்றி வீண் நம்பிக்கையெதுவும் சீனத் தரப்பினரிடம் இருக்கவில்லை. காலப்போக்கிலே, இந்தியாவுக்குள் தோன்றும் சக்திகளினாலேயே சமுதாய அரசியல் மாற்றங்கள் உண்டாகும் என்பதை அவர்கள் சரிவர உணர்ந்திருந்தனர். அவ்வாறிருந்தபோதும் நேரு காட்டக்கூடிய எத்தகைய நட்பு நடவடிக்கையையும் ஏற்றுப் பதில் கூறினர். இந்தியாவைப் பலதடவைகள் மன்னித்தனர் என்றுகூடச் சொல்வதிலும் தவறிருக்காது. உதாரணமாக 1959ல் கிளர்ச்சியாளன் - பிற்போக்குவாதி தலைலாமா அரசியல் பஞ்சையாக இந்தியாவிற்குள் நுழைந்ததும், 1956ல் கைச்சாத்திட்ட பஞ்சசீலத்தைக் கைவிட்டுவிட்டு, தலைலாமாவை அரசாங்கத் தலைவர் ஒருவருக்குரிய மரியாதைகளுடன் இந்தியா வரவேற்று உபசரித்தது. இது சீனாவை அவமதித்து ஆத்திரமூட்டுவதாய் இருந்தபோதும் சீனா எல்லைப் பிரச்சனையை போட்டுக் குழப்பவில்லை. இதனைப் பலவாறு பாராட்டுகிறார் மாக்ஸ்வெல்.

இறுதியாகச் சிலவற்றைத் தொகுத்துக் கூறுவோம்: ''இந்தியாவின் சீன யுத்தம்'' என்ற இந்நூலின் இன்றைய முக்கியத்துவம் யாது? பூர்ஷுவா பத்திரிகையாளர் பலர் மூடிவைத்த திரையை இது பலமாகக் கிழித்துள்ளது. ஆராய்ச்சிபூர்வமாக அமைந்திருக்கிறது. சீனா - இந்திய உறவுகள் சீரழிந்துபோகக் கூடாது என்பதற்காக மீண்டும் மீண்டும் சீனா பேச்சுவார்த்தைகள் நடத்த முன்வந்ததையும், அச்சந்தர்ப்பங்களிலெல்லாம், பிடிவாதமாக நேரு மறுத்ததையும், டாக்டர் கோபாலன் மேனாட்டில் ''ஆராய்ச்சிகள்'' செய்துவிட்டுத் திரும்பியபின் நேரு பிடிவாதத்தின் உச்சியை எட்டிப் பிடித்ததையும், முட்டாள்தனமான தீவிரவாதத்தில் போர்க்கோலம் பூண்டதையும் அப்போதைக்கப்போது சீனா எச்சரித்துப் பேச்சுவார்த்தைகளையே முன்வைத்ததையும், இறுதியில் முழுப் போர் மூண்டு இந்தியா தோல்விகண்டதையும் நுண்ணிய முறையில் பக்கஞ்சாராது விவரிக்கிறார் மாக்ஸ்வெல்.

வெற்றி கிட்டிய வேளையிலும் மக்கள் சீனம் தோற்றவர் மீது நிபந்தனைகளைத் திணிக்கவில்லை. அதற்கு, மாறாக, பிரச்சனைக்குரிய மக்மோகன் எல்லைக்கோட்டிலிருந்து பெருமளவு பின்வாங்கியது; கைப்பற்றிய இந்தியப் போர்வீரர்களையும் தளபாடங்களையும் திருப்பிக் கொடுத்துவிட்டு, மீண்டும் பேச்சு வார்த்தைகளுக்குத் தயாராய் நின்றது. இவ்விடத்தில் மாக்ஸ்வெல் எழுதும் போது, அவரையும் அறியாமலே உணர்ச்சி காணப்படுகிறது. சீனாவின் செயலை வியந்து பாராட்டும் மாக்ஸ்வெல் பொருத்தமான மேற்கோள் ஒன்றை எடுத்தாள்கிறார்.

''போர்க்களத்தில் வெற்றி பெற்றதன் பின்னர் சீனா தனது படைகளைத் தொடக்கத்திலிருந்த எல்லைக் கோட்டிற்குப் பின்னிழுத்த செய்கையானது, உலக வரலாற்றிலேயே முதன் முதல் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றாகும்; இராணுவ வெற்றியைப் பயன்படுத்தி மேலும் சில விஷயங்களைக் கோராமல் விட்ட முதலாவது வல்லரசு சீனாவேயாகும்.''

இவ்வாறு பிரிட்டிஷ் வெளிநாட்டு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியாயிருந்த கசியா பிரபு ஒரு சமயம் குறிப்பிட்டதை மாக்ஸ்வெல் தக்க இடத்தில் நினைவூட்டுகிறார். புரேட்ஷீற் என்ற ஆங்கில இந்நூலை விமர்சித்தவர் கூறியிருப்பது போல, ''தற்கால ஆசியாவின் வரலாற்றையும் அரசியலையும் ஆராய விரும்பும் மாணக்கருக்கு இந்நூல் இன்றியமையாதது. இன்னும் பல ஆண்டுகளுக்கு இது ஆதார பூர்வமானதாக விளங்குமென்பதில் ஐயமில்லை.

**செந்தூரன்**


தொழிலாளி

புதிய சந்தா

ரூ. ச.

1 வருடம் 12-00

6 மாதம் 6-00

3 மாதம் 3-00

தனிப்பிரதி 15 சதம்

நிர்வாகி:

''தொழிலாளி''

123, யூனியன் பிளேஸ்

கொழும்பு - 2

# மக்கள் ஜனநாயகப் புரட்சிக்காக

# தமிழ் மக்கள் தேசியரீதியில் ஐக்கியப்பட வேண்டும்

◎ 3-ம் பக்கத் தொடர்

மார்க்சிஸம்—லெனினிஸம்-மாசேதுங் சிந்தனை போதிக்கிறது.

இக் கோட்பாடுகளுக்கு அமைந்த நாடுகளாக இன்று உலகில் மக்கள் சீனக் குடியரசும், அல்பேனிய மக்கள் குடியரசும், கொரிய மக்கள் குடியரசும் விளங்குகின்றன. இந்த நாடுகளில் தேசிய இனப் பிரச்சனைகள் பூரணமாகத் தீர்வு காணப்பட்டுள்ளன.

சீனாவில் 92 சதவீதமுள்ள ஹான் இனத்தைச் சேர்ந்த மக்களுக்குரிய சகல உரிமைகளையும் மிகவும் சிறுதொகையினரான ஏனைய 8 சதவீதமுள்ள ஐம்பதுக்குக் கிட்டிய தேசிய இனங்களும் பெற்றுள்ளன. நான்கு தேசிய இனங்கள் பிரதேச சுயாட்சியையும் மற்றும் இனங்கள் அவர்களது பூகோள, பொருளாதார, இன, கலாச்சார அமைப்புக்கேற்ப உரிமைகளைப் பெற்றிருக்கிறார்கள். ஆக மொத்தம் அறுநூறு மக்களை மாத்திரம் கொண்ட ஒரு சிறிய இனம் கூட ஹான் இன மக்களுக்குரிய உரிமைகளைப் பெற்றுள்ளது.

எழுத்து வடிவம் இல்லாத மிகவும் சிறிய தேசிய இனங்களின் மொழிக்கு எழுத்து வடிவத்தை உருவாக்குவதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. சீனாவின் மகத்தான தலைவர் மாசேதுங் அவர்களை, சகல தேசிய இனங்களினதும் மகத்தான தலைவர் என்று அவர்கள் ஒருமுகப்பட்ட குரலில் அழைக்கிறார்களென்றால் அந்தக் குரல் சகல தேசிய இனங்களின் சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் ஐக்கியத்தையும் ஒலிக்கும் குரல்தான்.

## முதலாளித்துவத்தால் ஒருபோதும் தீர்வுகாண முடியாது

இலங்கையில் நிலைமை என்ன? இன்று அதிகாரத்திலுள்ளவர்கள் எவ்வளவுதான் சோஷலிஸ கோஷத்தைப் போட்டாலும், இவர்கள் தாங்களாகவே உதாரணத்திற்குக் காட்டக் கூடிய நாடுகளில் நடந்ததைப் போன்ற புரட்சி எதுவும் இலங்கையில் நடைபெறவில்லை. மேலும் ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவவர்க்கத்தை—அதனுடைய அரசு இயந்திரத்தை, ஆயுத பலாத்காரத்தால் கைப்பற்றவுமில்லை, தொழிலாளி வர்க்க சர்வாதிகார ஆட்சி நடைபெறவுமில்லை. இவை இல்லாமல் சோஷலிஸம் இல்லை. இதுவே மார்க்சிஸ—லெனினிஸ முடிவு.

''சுயமாக அழிந்துபடும் போக்கில் பூர்ஷுவா வர்க்க அரசின் இடத்தைப் பாட்டாளி வர்க்க அரசு எடுக்க முடியாது. பொது விதியின்படி பலாத்காரப் புரட்சியின் மூலம்தான் அது நிகழ முடியும்'' என்று லெனின் கூறியுள்ளார்.

ஏற்கனவே காலனிவாதிகளாலும், தரகு முதலாளி வர்க்கம், நிலப்பிரபுத்துவ வர்க்கத்தாலும் பாதுகாக்கப்படும் முதலாளித்துவ அரசு இயந்திரத்தை அப்படியே ஏற்று அதனுடைய இராணுவம், பொலிஸ், கோடு இவற்றின் துணையோடு, இதே வர்க்கங்களைச் சேர்ந்த இன்னொரு பகுதியினர் ஆட்சி புரிகின்றனர்.

இந் நிலையில், மார்க்சிஸம்-லெனினிஸம்-மாசேதுங் சிந்தனையைப் புரிந்துகொண்டவர்கள் இந்த ஆட்சியில் சோஷலிஸத்தைக் கண்டுபிடிக்க முயல்பவர்களை வெறும் அப்பாவிகள் என்றே கூறுவர்.

## ஏகாதிபத்திய துதிபாடும் அவமானச் சின்னங்கள்

இந் நாட்டில் தமிழ் மக்கள், தமது மொழி, இன, பொருளாதார, கலாச்சார சுதந்திரத்திற்காகப் போராடி வருகின்றனர். முற்றிலும் நியாயமான இந்தப் போராட்டம் துரதிர்ஷ்டவசமாக தவறான தலைமைக்குச் சென்றுவிட்டது. இன்றுள்ள முதலாளித்துவ சமூக அமைப்பிலேயே பாராளுமன்றப் பாதைமூலம் தமிழருக்கான உரிமைகளை பெற முயற்சித்துப் பல ஆண்டுகளை வீணான கஷ்டங்களுக்கும், அநாவசியமான தியாகங்களுக்கும் உள்ளாக்கி விட்டதையும்; தமது பொதுப் போராட்டத்தில், ஏனைய பெரும்பான்மை இன மக்களுடன் ஐக்கியப்படுவதற்குப் பதிலாக வேற்றுமையையும் பகைமையையும் வளர்க்கும் நிலை ஏற்பட்டதையும் தமிழ் மக்கள் உணரத் தலைப்பட்டுள்ளனர்.

ஒரு காலத்தில், தமிழ் மக்களினதும் இளைஞர்களதும் ஸ்தாபனமான யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் பூரண சுதந்திரக் கோரிக்கையை எழுப்பியது. டொனமூர்த் திட்டம் பூரண சுதந்திரத்தைக் கொடுக்கவில்லை என்பதற்காக, அத்திட்டத்தின் கீழ் நடந்த பொதுத் தேர்தலைக் கூடத் தமிழ் மக்கள் பகிஷ்கரித்து தமது ஏகாதிபத்திய எதிர்ப்பையும், தேசாபிமானத்தையும் வெளிக்காட்டினர். அத்தகைய பாரம்பரியமுடைய தமிழ் மக்களுக்கு தமிழ் மக்களின் தலைவர்கள் என்ற சாட்டில், இவர்களுடைய ஏகாதிபத்திய ஆதரவு நடவடிக்கைகள் அவமானம் தரத்தக்கவை.

மொழி, இன, பொருளாதார சுதந்திரத்திற்காகப் போராடுகிறோம் என்று கூறிக் கொள்ளும் தமிழரசுத் தலைமை இதே போன்ற சுதந்திரத்திற்காக, ஏகாதிபத்தியக் கொள்ளையர்களின் பிடியிலிருந்து நாட்டை விடுவிக்கப் போராடக்கூடிய, வியட்நாம், கம்போடியா, பலஸ்தீன் போன்ற ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் மக்கள் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கவில்லை, பதிலுக்கு மௌனத்தைக் காட்டுவதன் மூலம் ஏகாதிபத்தியத் துதி கூறுகிறது.

தமிழரசு-காங்கிரஸ் தலைமை வங்கி, பெரும் கம்பெனிகள். ரப்பர் தேயிலைத் தோட்டங்களில் பெருமளவு சொத்துக்களையும், பெருமளவு நிலங்களையும் கொண்டவர்களுமான நிலப்பிரபுத்துவ-முதலாளித்துவ வர்க்கங்களைச் சேர்ந்தவர்கள்; ஏகாதிபத்தியத்துடன் கட்டுண்டவர்கள்.

எவ்வளவுதான் சுதந்திரத்தைப் பற்றி இவர்கள் பேசிக் கொண்டாலும். தமது வர்க்கத்திற்கு எதிராக, தமது வர்க்க அரசு அமைப்பிற்கு எதிராகப் போகமாட்டார்கள். எனவேதான், தமிழ் மக்கள் இதுவரை பின்பற்றியதிலும் முற்றிலும் மாறுபட்டதும்: வெற்றிதரத்தக்கதுமான பாதையைப் பின்பற்ற வேண்டும்.

''துப்பாக்கிக் குழாயிலிருந்து அரசியல் அதிகாரம் பிறக்கிறது'' என்று தலைவர் மாசேதுங் அவர்கள் அனுபவ வாயிலாகவும், ஆழமாகவும் சிந்தித்துக் கூறிய கூற்றை ஏனைய மக்களைப் போல மிகவும் ஆழமாக தமிழ் மக்களும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

## மக்கள் ஜனநாயகப் புரட்சியே விடுதலைக்காண வழி

இந் நாட்டிலுள்ள சகல தேசிய இனங்களினதும், தொழிலாளர், விவசாயிகள், இதர தேசபக்தர்களுடன் ஐக்கியப்பட்டு, அதிகார வர்க்கத்தினது ஆயுத பலாத்காரத்தையும், அரசு இயந்திரத்தையும் ஆயுதப் போராட்டத்தால்-மக்கள் யுத்தத்தால், நீண்ட காலப் போராட்டத்தினூடாக முறியடித்து மக்கள் ஜனநாயகப் புரட்சியை வென்றெடுக்க வேண்டும். ஆயுதப் போராட்டமே-மக்கள் யுத்தமே வெல்லற்கரிய பாதை.

இந் நாட்டில், அடக்குமுறைக்கும் கொடுஞ் சுரண்டலுக்கும் உள்ளான, பெரும்பான்மை இனமான சிங்கள மக்கள் மத்தியிலும் ஏனைய தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியிலுமுள்ள தொழிலாளர் வர்க்கம், பல ஆயிரக்கணக்கான கிராம விவசாயிகளுக்குச் சொந்தமான நிலங்களை அவர்களது கண்ணீராலும் இரத்தத்தாலும் தோய்ந்த சோகக் கதைகளை எழுதிய உயில்கள் மூலம் தமதாக்கிக்கொண்ட பெரும் நிலப்பிரபுத்துவ வர்க்கத்தையும், அந்நிய கம்பெனிகளையும் எதிர்த்து நிலத்திற்காகப் போராடும் விவசாயிகள், சகல உரிமைகளையும் இழந்து இருக்கும் தோட்டத் தொழிலாளர்கள், காலனிமுறைக் கல்வியினால் அவதியுற்றுப் போராடும் மாணவர்கள்-ஆசிரியர்கள், நிலப்பிரபுத்துவபத்தாம் பசலி சாதி அடக்குமுறைக்கு உள்ளான மக்கள். அந்நிய ஆதிக்கத்தால் அவதியுறும் தேசிய முதலாளிகள், பல கோடி ரூபாய்களை இந் நாட்டிலிருந்து கொள்ளை கொண்டுபோகும் ஏகாதிபத்தியக் கொள்ளையர்களை எதிர்க்கும்தேசபக்தர்கள், தம்மை அடிமை கொண்டுள்ள அந்நிய ஏகாதிபத்தியம், ஏகாதிபத்தியத்திற்குப் பச்சை விளக்குக் காட்டும் தரகு முதலாளி வர்க்கம், நிலப்பிரபுத்துவம் ஆகிய மும்மலைகளையும், அடக்குமுறை அரசு இயந்திரத்தையும் மக்கள் யுத்தத்தின் மூலம் தூக்கி எறிந்து மக்கள் ஜனநாயகப் புரட்சி மூலம் சுரண்டலற்ற சமுதாய அமைப்பை நோக்கி, தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையில் முன்னேற இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில் அணிதிரளும் போராளிகளுடன் தமிழ் மக்களும் இணைவது மூலம் தமது போராட்டத்திற்குத் தேசிய வடிவம் கொடுக்க வேண்டும்.

இந்தப் போராட்டம் தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு மட்டுமல்லாது ஏனைய சகல பிரச்சினைகளையும் உள்ளடக்கியதாகும்.

நாடுகளையும் மக்களையும் அடிமை கொள்ளும் ஏகாதிபத்தியம்; சுரண்டலையும், ஏனைய ஒடுக்குமுறைகளைப் போல இன ஒடுக்குமுறையையும் கொண்டுள்ளது.

சுரண்டலையும் சகல விதமான ஒடுக்கு முறைகளையும் ஒழித்துக் கட்டும் சோஷலிஸ அமைப்பானது ஒவ்வொரு நாட்டுடனும் மக்களுடனும் பரஸ்பர சமத்துவ உறவுமுறையைக் கொண்டது.

## உலகப்புரட்சியின் சகாப்தம்

முதலாளித்துவம் தவிர்க்க முடியாதபடி அழிந்து பட்டு வரும் அதே வேளையில் சோஷலிஸம் தடுத்து நிறுத்த முடியாதவாறு முன்னேறுகிறது.

இன்றைய எமது சகாப்தம் உலகப் புரட்சியின் சகாப்தமாகும்.

இந்தோ சீன நாடுகளான வியட்நாம்; கம்போடியா, லாவோஸ் மக்களது வீரமிக்கப் போராட்டத்திலும், அரபு மக்களினதும் நாடுகளினதும் பலஸ்தீன் விடுதலைக்கான போராட்டத்திலும், ஜப்பானிய யுத்தத் தயாரிப்பை எதிர்த்தும் தென்கொரியாவை தாயகத்துடன் இணைப்பதற்குமான கொரிய மக்களது போராட்டத்திலும், செக்கோஸ்லாவாக்கியா, போலந்து மக்களின் சமூக ஏகாதிபத்தியத்திற் கெதிரான போராட்டத்திலும், தைவானை தாயகத்துடன் இணைப்பதற்கான எழுபது கோடி சீன மக்களின் போராட்டத்திலும், இதர நாடுகளினதும் மக்களினதும் கொழுந்து விட்டெரியும் புரட்சிப் போராட்டங்களாலும் சுற்றிவளைக்கப்பட்டுள்ள அமெரிக்க தலைமையிலான ஏகாதிபத்தியமும், சோவியத் யூனியன் தலைமையிலான சமூக ஏகாதிபத்தியமும் தத்தமது நாடுகளிலேயே வெகுஜனக்கிளர்சிகளால் நெருக்கடிக்குள்ளாகி நிமிர முடியாதிருக்கின்றன.

மகத்தான சோஷலிஸ சீனா விஸ்வ சக்தியாக உலகின் கிழக்கிலும், சோஷலிஸ கலங்கரை விளக்காக ஐரோப்பாவில் அல்பேனி

7-ம் பக்கம் பார்க்க

## பாலஸ்தீன கொரில்லாக்களின் கீதம்

### ஃபெடயீ

ஃபெடயீ! ஓ, என் தாய் நாடே!
மூதாதையர் நாடே!
ஃபெடயீ! ஓ, என் மக்களே!
சாவற்ச என் மக்களே!
வெற்றித் திடம், செந்தீ, பழிக்குப்பழி,
என் நாட்டில், தாய் நாட்டின் இரத்தப் பற்று,
சுற்றி மலை ஏறிப் போராட
சங்கிலி அறுக்க, துயர் கடந்தேன்.

ஃபெடயீ!
காற்றசை முழக்கத்தில்,
துப்பாக்கி வேட்டில்
போற்றற்கரிய மக்கள் மனவலியில்
போராட்டம் தொடர்கிறேன்
பாலஸ்தீனம், என் நாடு.
பாலஸ்தீனம், வீரம் விளைநிலம்,

ஓர் ஃபெடயீ,
பதாதை மேல் ஆணை,
மக்கள் மேல், வெந்த புண்ணிலும் மண்ணிலும் ஆணை.
வாழ்விலும் ஃபெடயீ, தாழ்விலும் ஃபெடயீ
தாய் நாடு சென்றடையும் வரை, நான்
ஓர் ஃபெடயீ

★ ஃபெடயீ, பாலஸ்தீன விடுதலைப் போராளி.

ஆசிரியருக்கு கடிதம்

# 'மக்கள் அரசாங்கத்தின்' கீழும் மோசடி தொடர்கிறது

விற்பனை அபிவிருத்தித் திணைக்களம் (மார்க்கெற்றிங் டிப்பாட்மென்ற்) நேரடி அரசாங்க நிர்வாகத்தின்கீழ் இயங்குவது. வர்த்தக மந்திரி திரு. ரி. பி. இலங்கரத்திஞவின் அமைச்சின்கீழ் இது அடங்குவது. (C. W. E.) சி. டபிள்யூ. ஈ. விற்பனைத் திணைக்களம், ஐக்கிய வியாபாரச் சங்கங்கள் (Coperatives Stores) முதலியவைகளுக்கு விமரிசையான வரவேற்பளிக்கப்படுகின்ற மக்கள் அரசாங்கத்தின் கீழ் நடக்கும் தில்லுமுல்லுகளையும் ஊழலையும் அம்பலப்படுத்த விரும்புகிறோம்.

சுரண்டல்கார, கொடுமைக்கார முதலாளிகள் அத்தியாவசிய உணவுப் பொருட்களைப் பதுக்கி மக்கள் வாயில் மண் போடாது மக்களைக் காப்பாற்றுவதற்கென்றுதான் மேற்சொல்லப்படும் அரசாங்க ''மக்கள் கடை''கள் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் திறக்கப்படுகின்றன என்று கூறப்படுகிறது. அத்துடன் கொள்வனவு நிலையங்களும் வைத்தியசாலை உணவு விநியோகக் கிளைகளும் விற்பனைத் திணைக்களத்திடம் ஒப்படைத்துத் ''தேசியமயம்'' ஆக்கியதும் தனிப்பட்ட முதலாளிகளின் சூறையாடல்களிலிருந்து, பாவனையாளர்களையும், விவசாயிகளையும், நோயாளர்களையும் காப்பாற்றுவதற்காக என்றும் சொல்லப்படுகிறது. ஆனால், அதே சூறையாடலை இதே அரசாங்க விற்பனைத் திணைக்களத்தின் மானேஜர்களும், அதிகாரிகளும் கையாளுகிறார்கள்.

இன்று தட்டுப்பாடான அத்தியாவசிய உணவுப் பொருட்கள் பல. அவற்றுள் முக்கியமான மல்லி, மிளகாய், புளி, மக்கள் கடைகளிலும் மக்களுக்குக் கிடையாது. கள்ளத்தனமாகப் பின்கதவால் அதிகாரிகளும் அவர்களின் அடிவருடிகளும் கையாடிச் செல்கிறார்கள். கள்ளமார்கட்டிலும் விற்கிறார்கள். மேல்நாட்டு மரக்கறி வகைகள் சாதாரண விலையில் கிடைக்கும் என்று தப்புக்கணக்குப் போடும் பலர் ஏமாறுகிறார்கள். புழு அரித்து அழுகி நாற்றமெடுக்கும் பொருட்களே புடம்போட்டுப் பூசி மெழுகி மக்களிடம் திணிக்கப்படுகின்றன. அதைத் திணித்துக் காசாக்கும்படி தொழிலாளர்கள் வற்புறுத்தப்படுகிறார்கள். நோயாளர்களுக்குக் கொடுக்கப்படும் உணவுப் பொருட்களின் தரம் பேச வேண்டியதில்லை. எதுவித பொறுப்பான விற்பனைத் திணைக்கள உத்தியோகத்தரும் வைத்தியசாலைக்குக் கொடுக்கப்படும் உணவுப் பொருட்களைத் தாம் கொண்டு சென்று கொடுப்பதில்லை. அதேபோல அதைப் பொறுப்பேற்கும் வைத்தியசாலை அதிகாரியும் நோயாளருக்குச் சாதகமாக நேர்மையான முறையில் அப்பொருட்களைக் கையேற்பதில்லை. இரு பகுதிக்குமிடையில் கையாடலுக்கான ஒப்பந்தம் இருப்பதை மறுக்க முடியுமா? மறைக்க முடியுமா? நோயாளர்கள் பலியாடுகளா?

இனி இங்கு வேலை செய்யும் தொழிலாளர்களை எடுத்துக் கொள்வோம். இலங்கையில் இப்படிப்பட்ட அநியாயங்களைப் பார்ப்பது அபூர்வம். 8 வருடம் சமயாசமய ஊழியர்களாகக் கடமையாற்றிய தொழிலாளர்களும் இன்னமும் அதே தரத்தில் அதே சம்பளத்தில் அதேவிதமாகச் சுரண்டப்படுகிறார்கள்.

1. வேறு எங்கும் காணமுடியாத சம்பளமுறை இங்குண்டு. ஒரு நாளைக்கு ரூ. 4.35 சதம் மாத்திரமே சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது. மாதத்தில் 14 நாள் வேலை கிடைக்கிறது. ஆனல், அனைவரும் படித்த வாலிபர்கள்.

.2. நாளொன்றுக்குச் சராசரி 10 மணித்தியாலம் வேலை செய்ய வேண்டும். சில சமயங்களில் இரவு பகல் என்றில்லாமல் முழுநாளும் 24 மணித்தியாலமும் ''ஓவர்டைம்'' சம்பளமோ அல்லது குறைந்த பட்சம் தேத்தண்ணி வடை தானுமோ இல்லாமல் கசக்கிப் பிழியப்படுகிறார்கள். ஒரு கடை முதலாளி செய்யாத அதட்டலை ஒரு விற்பனைத் திணைக்கள மானேஜரிடம் நேரில் பார்க்கலாம்.

3. 180 நாள் வேலை செய்தவர்களை நிரந்தரமாக்குவோம் என்று முன்பு அதிகாரிகள் கூறினர். தொழிற் கோட்டுச் சட்டமும் அது என்று சொல்லப்பட்டது. ஆனல் வருடக்கணக்கில் மாடு ஆடு போல் உழைத்தவர்களும் இன்னும் உருப்பட்டபாடில்லை.

4. தகுதியுள்ளவர்கள் அனுபவம் உள்ளவர்கள் இத் திணைக்களத்தில் சாதாரண ஊழியர்களாக இருக்கையில் வெளியிலிருந்து தனிப்பட்ட செல்வாக்கில் எடுக்கப்பட்டவர்களுக்கு உயர்ந்த பதவியும் உயர்ந்த சம்பளமும், நிரந்தர வேலையும் வழங்கப்படுகிறது. தொழிலாளர்கள் - உழைப்பைத் தருபவர்கள் - என்றும் மிதிபலகைகளாக இருக்கின்றனர்.

5. மக்களுக்கும் நோயாளர்களுக்கும் உபயோகத்திற்குதவாத உணவுப் பொருட்களை வழங்கும்படி தொழிலாளர்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். தம்க்கு வரும் தீய பெயர்கள் அத்தனையையும் தொழிலாளர்கள்மேல் மாற்றிவிடுவதில் அதிகாரிகள் என்றும் கைதேர்ந்தவர்கள். எப்போதும் நல்ல பெயர்களைத் தமதாக்கிக்கொள்வர். சில சமயங்களில் தாம் செய்யும் கையாடல்களைத் தொழிலாளர்மேல் சுமத்தி அவர்களைக் காட்டிக் கொடுத்து வீட்டுக்கும் அனுப்பியுள்ளனர். மக்களும், நோயாளர்களும் ஒன்றும் அறியாத விற்பனைத் திணைக்களத் தொழிலாளர்கள் மேல் பழி நினைக்க சுரண்டும் பேர்வழிகளான மானேஜர்மார் நல்ல பெயர் பெற்றுப் பதவி உயர்வு பெறுகிறார்கள்.

மக்கள் பொருட்களை வாங்குவதற்குக் கஷ்டப்பட்டு அரசாங்க மக்கள் கடைகளுக்கு வருகிறார்கள் நோயாளர்கள்.

இந்த திணைக்களத்தால் பாவனையாளர்களுக்கும், விவசாயிகளுக்கும், அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் எத்தகைய நன்மையும் கிடைக்கவில்லை. ஆனல், அதிகார வர்க்க முதலாளித்துவ வாதிகளுக்கு சகல நன்மைகளும் கிடைக்கின்றன.

விற்பனைத் திணைக்களத் தொழிலாளர்கள்

## மக்கள் ஜனநாயகப் ......

6-ம் பக்கத் தொடர்

யாவும் அனைத்துலகப் புரட்சிகர மக்களதும் நாடுகளதும் உறுதுணைவராக - சொந்தப்பிரதேசங்களாக விளங்குகின்றன.

அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியமும், சோவியத் யூனியன் தலைமையிலான சமூக ஏகாதிபத்தியமும் கள்ளக் கூட்டுச் சேர்ந்து உலகைப்பங்கு கொள்ளும் முயற்சியில் தமது கால்களை அகல வைத்துள்ளது மூலம் அனைத்துலகப் புரட்சிகர மக்களாலும் நாடுகளாலும் அடிக்கு மேல் அடிபட்டு வருகிறது. அதனுடைய அழிவும், உலகப் புரட்சியின் வெற்றியும் தவிர்க்க முடியாதது.

### தலைவர் மாஓவின் தீர்க்கதரிசனம்

''இப்பொழுது தொடக்கம், அடுத்த ஐம்பது முதல் நூறு ஆண்டுகள் அல்லது மேலும் கூடுதலான காலம், உலகில் சமுதாய அமைப்பு முறை முற்ருக மாற்றமடையும் மகத்தான சகாப்தமாகவும் மண்ணையும் விண்ணையும் அதிரச் செய்யும் ஒரு சகாப்தமாகவும் முந்திய எந்த வரலாற்றுக் கட்டமும் கண்டிராத ஒரு சகாப்தமுமாக விளங்கும்.''

இவ்வாறு தலைவர் மா சேதுங் அவர்கள் தீர்க்க தரிசனத்துடன் கூறியிருப்பது முற்றிலும் சரியானதும் வரலாற்றின் வெளிப்பாடுமாகும்.

கடந்த டிசம்பர் 5ந் திகதி 'தொழிலாளி' இதழில் வெளியான கீழ்க்காணும் கவிதையில் சில அடிகள் விடுபட்டு விட்டன. எனவே, அக் கவிதையை மீண்டும் முழுமையாகப் பிரசுரிக்கின்றோம். — ஆர்.

## போரில் குதித்துப் புரட்சி செயப் பயிற்சிசெய்வோம்

பாரேதை லோகப் பாட்டாளி வர்க்கத்தின்
மாமேதை மாசேதுங் சிந்தனைகள் படிப்போம்
கட்சியின் கொள்கைகளை கருத்தில் பதித்துவைத்து
பட்சமுடன் சென்று பலருக்கும் சேவிப்போம்
கிராமப் புறங்களில் கிடந்து விவசாயிகளை
சிரமப் பட்டுநாம் சீராக வேலைசெய்து
பட்டி தொட்டிகளை பள்ளித் தலமாக்கி
தட்டி யெழுப்பிஒரு சக்தியென வளர்ப்போம்
நாட்டுப் புறத்திலிருந்து நகரங்களைச் சுற்றி
நீட்டு யுத்தங்கள் நெடுநாள் நடத்துவோம்
இட்டமுடன் கீழிறங்கா எதிரிகளை வீழ்த்தி
பட்டினங் களைப்பிடித்து பாராட்சி யைப்பிடித்து
துப்பாக்கி முனையில் தொழிலாளர் விடுதலையை
தப்பாமல் வென்று தாரணியை விடுவிப்போம்
கூட்டாளி ஏழைக் கூலிவிவ சாயியுடன்
பாட்டாளி வர்க்கத்தை பாராள வைப்போம்
வரண்ட வாழ்வுக்கு வறுமைக்கு வித்திட்ட
சுரண்டல் அமைப்பை சுக்கு நூருக்கி
வேஷங்கள் இன்றி மேதினியின் நலன்நோக்கும்
சோஷலிஸம் காணச் சுறுசுறுப்பாய் உழைப்போம்
ஆரம்ப நிலையிலிருந் தனைவரையும் முன்னேற்ற
பாரம் பரியப் பண்புகளை நெஞ்சிருத்தி
தொல்கலைகள் யாவும் துருவி ஆராய்ந்து
பல்கலைகள் கற்றுப் பண்டிதர்கள் ஆவோம்
நல்லூரில் வாழாமல் நால்வருடன் பழகாமல்
கல்லூரி வாழ்வு கனவிலும் கிட்டாமல்
காடு கரம்பைகளில் கட்டிவைத்த லயங்களிலே
ஆடு மாடுகள்போல் அடைத்து பூட்டிட்டு
கூலிதனக் கென்றும் கொத்தடிமை ஆக்கிவரும்
மூலதனக் கும்பல்களை மூடிப் புதைப்பதற்கு
படிப்பவை படித்து படைப்பவைகள் தாம்படைப்போம்
இடிப்பவை இடித்தே எடுப்பவைகள் இன்றெடுப்போம்
கலைகள் வளர கற்பனையின் வளம் சுரக்க
சிலைகள் வடித்து சிற்பங்கள் செதுக்குவோம்
ஓவியங்கள் தீட்டி உற்சாகம் மிக ஊட்டும்
காவியங்கள் தீட்டி கதைகள் கட்டுரைகள்
மெட்டுப் பாட்டுவகை வியப்புமிகும் கவிதைவளம்
கொட்டிக் குவிப்போம் குன்றுபல குன்றுகளாய்
நாடகங்கள் நடித்து நாட்டியங்கள் ஆடி
பாடகங்கள் ஒலமிட பரதம் பண்ணிசைத்து
உழைக்கும் மக்களுக்கு ஓயாமல் சேவைசெய்வோம்
முளைக்கும் சந்ததிகள் முன்னேற வழிகாட்டி
உடம்பை இரும்பாக்கும் உடற்பயிற்சி வகைகள்
உடம்பை துரும்பாக்கும் உடற்பயிற்சி சாகஸங்கள்
குத்தி விளையாட்டு கூறுமொரு மல்யுத்தம்
கத்தி விளையாட்டு கராட்டி கம்படிகள்
செப்படி வித்தைகளும் சேவிக்க மக்களுக்கு
எப்படியும் செய்வோம் இடும்பைகளை வென்றிடுவோம்
மருட்சிக் கலைக்கடலில் மயங்காமல் நாம்குளித்து
புரட்சிக்கு வித்திட்டு புதியவுலகமைப்போம்
பேனு முனைநடத்தி பிரசாரம் பலநடத்தி
சேனு முனைநடக்கும் சேனைவகை படைப்போம்
வேட்டுகள் வைக்க வெடிகுண்டு வீசிவர
கோட்டைகள் தீர்க்கும் குண்டினங்கள் தயாரிக்க
துப்பாக்கி ஏந்தி தூர்த்தர் துரோகிகளை
தப்பாமல் சுட்டு சாவோலை வாசிக்க
பேரிடிபோல் முழங்கும் பீரங்கி முழக்க
காரிடிமேல் முழங்கும் கள்ள விமானங்கள்
தலையில் குண்டுமழை தூவித் தாக்குமுனம்
தலையில் அடித்தவற்றை தரைசாய்த்து வெற்றிபெற
தாங்கி தகர்த்தெறிய தரைக்குண்டு புதைக்க
வாங்கி யிடைமறித்து வாகனங்கள் தூளாக்க
சத்தம் சலனமின்றி சாகஸங்கள் ஆடி
யுத்த நிலைமைகளை யூகித்து உளவறிந்து
பொரும்படைகள் போக்கி போர்க்கு விரைந்தோடி
வரும்படைகள் சுற்றி வளைத்துத் துடைத்தொழிக்க
மக்கள் யுத்தத்தின் மாசேதுங் தத்துவத்தை
ஒக்க இருந்துநாம் ஊட்டுவோம் படிப்போம்
நீரில் குதித்தொருவர் நீந்திப் பழகுதல் போல்
போரில் குதித்துப் புரட்சிசெயப் பயிற்சிசெய்வோம்.

பாடியது: ''மலைக்குயில்''

# மந்திரி பீலிக்ஸும் சிங்கப்பூரும்

அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பிரதம மந்திரியுடன் சேர்ந்து சிங்கப்பூருக்குச் செல்லாமல் தனது பயணத்தை ரத்துச் செய்யக் காரணமாக இருந்த ''தனிப்பட்ட காரணங்கள்'' அரசியல் வட்டாரங்களில் பெரும் ஊகத்தைக் கிளப்பியிருந்தன. இப்பொழுது அவர் அந்தத் ''தனிப்பட்ட காரணங்களை'' எப்படி சில நாட்களில் வெற்றிகரமாகச் சமாளித்துக் கொண்டு பிரதம மந்திரியுடன் சேர்ந்து கொள்வதற்கு சிங்கப்பூர் பயணமானுர் என்ற விஷயமும் பெரும் ஊகத்தையே கிளப்பியிருக்கிறது.

இதற்கான காரணம் மிகச் சுலபமானதும் அரசியல் காரணமற்றதுமாக இருப்பதால், சோஷலிஸ அரசாங்கம் என்று செப்படி வித்தை காட்டும் இந்த அரசாங்கத்தின் உயர் அரசியல் தலைமைப் பீடத்தில் இருப்பவர்களைப் பற்றி நினைக்கும் பொழுது எவருக்கும் சலிப்பு ஏற்படவே செய்யும். காமன்வெல்த் பிரதம மந்திரிகளின் மகாநாட்டில் தானே தனியனுகத் திறமையாகச் சமாளிக்க முடியும் என்று திருமதி பண்டாரநாயக்கா கருதவில்லை என்பது ஒரு வெளிப்படையான விஷயமாகும். ஏனென்றுல், அங்கு பிரச்சனைக்குரிய விஷயங்கள் தலைகாட்டும் என்ற நிலைமை இருந்தது. இதனுல் அவருக்கு, தன் பக்கத்தில் துணையிருக்கக் கூடிய வாதத் திறமைவாய்ந்த ஒருவர் தேவையாக இருந்ததோடு அதற்கு பீலிக்ஸ் தகுதி வாய்ந்தவராகவும் இருந்தார். ஆனுல், அதிலும் ஒரு இடைஞ்சல் ஏற்பட்டது.

நம்பமான வட்டாரங்களிலிருந்து கிடைத்த செய்திகளின்படி, திருமதி பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா சிங்கப்பூருக்குச்செல்வதில் மிகவும் ஆர்வம் உள்ளவராக இருந்தார் என்றும், எனவே தன்னையும் கூட்டிச் செல்ல அனுமதி கிடைக்காவிட்டால் சிங்கப்பூருக்குப் பயணம் மேற்கொள்ள வேண்டாம் என்றும் கணவரைத் தூண்டியிருந்தாராம். ஆனுல், பிரதம மந்திரி தலையிட்டு, மனைவிமார் எவரும் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று கட்டளை விதித்திருந்தாராம். எனவே ''தனிப்பட்ட காரணங்களுக்காக'' பீலிக்ஸ் சிங்கப்பூருக்குச் செல்ல மறுத்துவிட்டார்.

சிங்கப்பூர் சென்றடைந்தவுடன் பிரதமர் தனக்கு வலது கைபோல் இருக்கக்கூடிய ஒருவரின் தேவையை மிகவும் உணர்ந்து கொண்டதுடன், பீலிக்ஸ் விதித்த நிபந்தனைகளுக்கு இணங்கி அவரைவந்து சேரும்படி தந்தி கொடுத்தாராம். எனவே, கணவனும் மனைவியும் சிங்கப்பூர் பயணமார்கள்.

ஆனுல், இந்த அரசியல் புயலைக் கிளப்பியதற்கான சுவையான காரணங்கள் மட்டும் இரகசியமாகவே வைக்கப்பட்டிருக்கின்றன. நிலைமைக்கொப்ப திருகுதாளம் போடும் லேக் ஹவுஸ் பத்திரிகைகள் இன்னும் சிறிது முன்னேறி, விமான நிலையத்தில் எடுத்த பீலிக்ஸின் படத்தை அவரின் மனைவியைத் தவிர்த்துத் தமது பத்திரிகைகளில் பிரசுரித்திருந்தன. ஆனுல், அவர் மனைவியார் உடுத்தியிருந்த சேலையில் ஒரு பகுதியைமட்டும் காணக்கூடியதாக இருந்தது. காமன்வெல்த் பிரதமர்களின் மகாநாட்டில் திருமதி பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா எதைச் சாதிக்கப்போகிறுர் என்பதைக் காண்பதற்காக நாம் ஆவலுடன் மூச்சை அடக்கிக் கொண்டு காத்திருக்கிருேம்!

## நாம் கூறியது சரி

வரவு–செலவுத் திட்ட உரையின் போது, நிதி மந்திரி பெரிய நோட்டுக்கள் செல்லுபடியாகாது என அறிவித்துவிட்டு அதன்மூலம் 10 கோடி ரூபாய்களை வருமானமாகப் பெறமுடியும் என்று பீத்திக் கொண்டார். இதைப்பற்றி நாம் விமர்சித்தபோது, நிதி மந்திரி நினைப்பதுபோல் இந்த இலக்கை அடைய முடியாது என்று குறிப்பிட்டிருந்தோம். முதலாளித்துவத்தின் கீழ் வரி கட்டுவதற்கு டூப் அடிப்பதும், சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவதும் ஒரு கலையாகவே விருத்தி செய்யப்பட்டு வந்திருக்கும் காரணங்களாலேயே அப்படிக் கூறியிருந்தோம். கடந்த வாரம், தனது இலக்கை அடைய முடியவில்லை என்ற உண்மையை நிதிமந்திரி ஏற்க முடியாமல் ஏற்றுக் கொண்டிருப்பது நாம் சொன்னதை சரி என்று நிரூபித்து விட்டது.

## சீன எதிர்ப்பு படத்துக்கு கடும் எதிர்ப்பு

### எஸ்.ரி.என். நாகரத்தினம், சிவதாசன் கைது

இலங்கை-சீன நட்புறவுக்கு பாதகம் விளைவிக்கும் ''மீனவனின் பாதணிகள்'' என்ற படம் யாழ்ப்பாணத்தில் திரையிடப்பட்டபோது, அதற்கு மக்கள் தமது கடுமையான எதிர்ப்பை செயலில் காட்டியுள்ளார்கள்.

இது சம்பந்தமாக பொலிஸ் தனது வழமையான அடக்கு முறையை முற்போக்கு இயக்கத் தலைவர்கள் மீது பிரயோகித்துள்ளது. கடந்த 9ந் திகதி மாவை ஆலய பிரவேச வழக்கு சம்பந்தமாக மல்லாகம் கோர்ட்டுக்கு வந்திருந்த தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தலைவர் எஸ். ரி. என். நாகரத்தினத்தையும், எஸ். சிவதாசனையும் பொலிஸ் கைது செய்துள்ளது.

தோழர். நாகரத்தினத்தை அடுத்தடுத்து பொலிஸ் கைது செய்து வழக்குகளை சோடிப்பது சாதிவெறியர்களின் தூண்டுதலா என்று தீண்டாமை ஒழிப்பு வெகுஜன முன்னணி வெளியிட்ட அறிக்கையில் பலமாகக் கண்டித்துள்ளது.

## தோட்டத் தொழிலாளர்கள் படுகொலை செய்யப்படுவதை எதிர்த்து ஐக்கிய நடவடிக்கை

அண்மையில் மாத்தளை, நாளாந்த தோட்டத்தில் தோட்ட நிர்வாகிகள் மூன்று தோட்டத் தொழிலாளர்களை சுட்டுக் கொலை செய்ததோடு, பல தொழிலாளர்களையும் படுகாயப்படுத்தியுள்ளனர். இத்த கிருகத்தனமான செயலை வன்மையாகக் கண்டித்தும், கொலையாளிகள் மீது இரக்கமற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கவும், சமீப காலத்தில் அடிக்கடி தோட்டத் தொழிலாளர்கள் பொலிஸிஞலும், தோட்ட நிர்வாகிகளாலும் சுட்டுக் கொல்லப்படுவதை எதிர்த்தும் தகுந்த தொழிற் சங்க நடவடிக்கை எடுப்பதற்காக கடந்த 12ந் திகதி சகல தோட்டத் தொழிலாளர் சங்கங்களும் ஒன்று கூடின.

இக் கூட்டத்தில் ஜனவரி 19ந் திகதி மாத்தளையில் தொழிற்சங்கங்களின் ஐக்கியப் பொதுக் கூட்டம் ஒன்று நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டது. மேலும் தொடர்ந்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி தீர்மானிப்பதற்காக இச் சங்கங்களின் முக்கியஸ்தர்கள் மீண்டும் 17ந் திகதி கூடுகிறுர்கள்.

பொலிஸும், தோட்ட நிர்வாகிகளும் நீசத்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்து தோட்டத் தொழிலாளர்களை கொலை செய்வதும், படுகாயப்படுத்துவதும் சகஜமாகிவிட்டன. இதை எதிர்த்து நாட்டில் பலத்த கண்டனங்களும். எதிர்ப்புகளும் தோன்றியுள்ள போதிலும் ''மக்கள் அரசாங்கம்'' என்று கூறிக்கொள்ளும் முக்கூட்டணி அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்கள் சுட்டுக் கொலை செய்யப்படுவததை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது,

## பலாங்கொடையில் கூட்டம்

பலாங்கொடை மாவட்ட மொருலை தோட்டத்தில் கடந்த 4ந் திகதி செங்கொடி சங்கத்தின் பொதுக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் மாவட்ட பிரதிநிதி தோழர் எஸ். பி. வெங்கடாசலம், துணைப் பிரதிநிதி வி. கே. பெரியசாமி, ரட்ணம், குமாரவேலு ஆகியோர் சொற்பொழிவாற்றினுர்கள். தோழர் பெரியசாமியும், தோழியர் அன்னம்மாள் மற்றும் பல தோழியர்களும் புரட்சிகீதங்கள் பல பாடினுர்கள்.

தோழர் ஏ. கருப்பையா தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

## இன வெறி பிடித்த தென் ஆபிரிக்காவுக்கு..

◎ 1-ம் பக்கத் தொடர்

நவ காலனியாதிக்க நாடுகளிலும் அரசியல் மேடையில் ஆடுகின்ற பொம்மைகள் இலங்கையில் செய்யப்பட்டவைதான். ஆனுல், அதன் சூத்திரக் கயிறு லண்டனிலிருந்தும், வாஷிங்டனிலிருந்தும் இழுக்கப்படுகிறது. இதுதான் நவ காலனியாதிக்கம். எத்தனை காமன் வெல்த் மாநாடுகள் நடத்திஞலும்சரி, அல்லது ஹீத்தோடு சம அந்தஸ்தில் தான் திருமதி பண்டாரநாயக்கா இந்த மாநாட்டில் கலந்து கொள்கிறுர் என்று என்னதான் பாசாங்கு செய்தாலும் சரி பரவாயில்லை; அவையொன்றும் இந்த அவலட்சணமான உண்மையை மறைத்துவிட முடியாது.

நேர்த்தியான, இனிமையான வார்த்தைகளோ அல்லது சமரசங்களோ ஏகாதிபத்தியதை அப்புறப்படுத்திவிடப் போவதில்லை. தோழர் மாசேதுங் கூறியுள்ளவாறு, ''பிற்போக்கான ஒவ்வொன்றும் ஒரே தன்மையுடையது. அதை நீ அடியாவிட்டால், அது விழாது. இதுவும் நிலத்தைக் கூட்டுவது போன்றது. வழக்கத்தில் துடைப்பம் எட்டாத இடத்தில் தூசி தானுக மறைந்து விடாது.'' அவர் மேலும் போதித்துள்ளார். ''எதிரி தானுகவே அழியமாட்டான். சீனப் பிற்போக்குவாதிகளோ அல்லது சீனுவிலுள்ள அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புச் சக்திகளோகூட வரலாற்று அரங்கிலிருந்து சுயமாக இறங்கமாட்டார்கள்.''

வெளிவந்து விட்டது

**புரட்சிகரப் பாடல்கள்**

விலை சதம் ஐம்பது

விபரங்களுக்கு:
யாழ் புத்தக நிலையம்
91, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

பதிப்பித்து வெளியிடுபவர்: ஏ. ஐயசூரிய, 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2, அச்சிட்டது: தொழிலாளி அச்சகம், 121, யூனியன் பிளேஸ், கொழும்பு-2.